கிரந்தஎழுத்து சுவடிப்பயிற்சி கையேடு

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
மற்றும் ஆய்வு மையம்
தஞ்சாவூர்

T. 24744

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 581

கிரந்த எழுத்து சுவடிப்பயிற்சி
கையேடு

A
Handbook
of
Grantha Manuscript Training

தொகுப்பாசிரியர்:

முனைவர் ஆ. வீரராகவன், M.A.,B.L.I.S. Ph. D.,
சம்ஸ்கிருத பண்டிதர்
சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்
மற்றும் ஆய்வு மையம்
தஞ்சாவூர்

2017] [விலை ரூ.170 -00

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	: A Hand Book of Grantha Manuscript Training
Compiler	: Dr. A. Veeraraghavan, M.A.,B.L.I.S. Ph. D.,
Publisher	: Director, Sarasvati Mahal Library & Research Centre, Thanjavur.
Publication	: 581
Language	: Sanskrit & Tamil
Edition	: First Edition
Date of Publication	: 2017
Paper used	: T.NP.L. 18.6 kgs.
Size of the Book	: 25 x 19 c.m.
Printing Type used	: 16&12 pt.
Number of pages	: 262
No. of copies	: 500
Printer	: Sarasvati Mahal Library Press
Binding	: Cardboard
Subject	: Manuscriptalogy
ISBN	**: 978-93-85343-19-3**
Price	: Rs. 170.00

வெளியீட்டாளர் முகவுரை

அருஞ்சுவடிகளின் களஞ்சியமாகத் திகழுகின்ற, வரலாற்றுச் சிறப்புடைய சரசுவதி மகால் நூலகம் தன்னிடத்தே உள்ள வெளிவராத அரிய சுவடிகளின் அடிப்படையில் பல்துறை சார்ந்த பன்மொழி நூல்களை நூலக மொழிப்பண்டிதர்கள், துறை வல்லுநர்களைக்கொண்டு நூல்களாகப் பதிப்பித்து வெளியிட்டு வருகின்றது. அவ்வரிசையில் **கிரந்தஎழுத்து சுவடிப்பயிற்சி கையேடு** என்னும் இந்நூல் தற்பொழுது முதல் பதிப்பாக வெளியிடப்படுகிறது.

கிரந்த எழுத்து சோழநாட்டில்தான் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டது. சோழர்களின் பல சாஸனங்கள் இந்த எழுத்தில் அமைந்திருக்கின்றன. ஆகவே இந்த எழுத்திற்கு முக்கியத்துவம் அளித்தவர்கள் சோழர்கள். சரசுவதி மகால் நூலகத்தில் வேதாகம நூல்கள் கிரந்த எழுத்தில் பல உள்ளன. வேதாகமம் பயிலும் மாணவர்களும், வரலாறு மற்றும் தமிழ்த்துறையில் பயிலும் முனைவர் பட்ட ஆராய்ச்சியாளர்களும், ஆசிரியர்களும், ஆர்வலர்களும் தாமாகவே முயன்று கிரந்த எழுத்தினைக் கற்றுக்கொள்ளும் வகையில் 'கிரந்தஎழுத்து சுவடிப்பயிற்சி கையேடு' எனும் இந்த நூல் உருவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

இந்நூலில் 'கிரந்தபாலபாடமாலா' என்னும் நூல் முழுமையாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இதுநாள்வரை கிரந்த எழுத்து பயிற்சி வகுப்பில் இந்நூலகம் அளித்துவந்த நகல்பிரதியைக் காட்டிலும் இப்பாடமாலா வேறுபட்டது. எளிமையையும் பழமையையும் இது பெற்றுள்ளது. பயிற்சிக்காக இந்நூலில் கிரந்த நூற்பகுதிகள், கல்வெட்டுகள், செப்பேடுகள், கையெழுத்துப் பிரதிகள் ஆகியவை தமிழ் எழுத்தாக்கத்துடன் அளிக்கப்பெற்றுள்ளன. சிற்சில இடங்களில் தெலுங்கு, தேவநாகரிப்பகுதிகளும் தரப்பட்டுள்ளன. தெலுங்கு மொழியில் கிரந்த எழுத்துச்சுவடி, மணிப்பிரவாளம் என்ற பெயரில்

ஒரு சிறு காப்பியம், ஆண்டு, நாள், மணி, எண் என அனைத்தும் கிரந்த எழுத்தில் அமைந்த பஞ்சாங்கப்பகுதி, கடபயாதி எண்ணிக்கை கூறும் பத்மசக்ரம், இராமாயண கிரந்தம் அல்லது இராமாயண காண்டங்களின் மொத்த சுலோக எண்ணிக்கையைத் தெரிவிக்கும் சுவடி எழுத்தாளரின் குறிப்பு போன்றவை இந்நூலில் அரியசெய்திகளைத் தெரிவிப்பதாய்த் திகழ்கின்றன. இந்நூலை சிறப்பாகத் தொகுத்துப் பதிப்பித்தளித்த இந்நூலக சம்ஸ்கிருதப்பண்டிதர் முனைவர் ஆ.வீரராகவன், M.A.,B.Ed.,B.L.I.S.Ph.D., அவர்களுக்கு என் பாராட்டுக்கள்.

இந்நூல் வெளிவரத் தேவையான நிதியுதவி நல்கிய அரசுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூல் நன்கு வெளிவர ஆவன செய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் திரு. இரா. ஜெய்னுலாப்தீன், M.Sc., அவர்களுக்கும், நூலகர் முனைவர் எஸ். சுதர்ஷன். M.A.,B.Lit.,M.L.I.S.Ph.D., அவர்களுக்கும், ஒளியச்சு மற்றும் கணினி அச்சகப்பிரிவினருக்கும் மற்றும் நூலகப்பணியாளர்களுக்கும் என் பாராட்டுக்கள்.

தஞ்சாவூர்
27.03.2017

ஆ. அண்ணாதுரை, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

முன்னுரை

பன்மொழிக் கருவூலகமாகத் திகழும் சரசுவதி மகால் நூலகத்தில் ஏராளமான கிரந்த எழுத்துச்சுவடிகள் காணப்படுகின்றன. கிரந்தம் என்பது ஒரு மொழியினையும், கிரந்த எழுத்தினையும், கிரந்த எண்ணிக்கையினையும் குறிக்கின்றது. கிரந்தம் என்றால் ஒரு நூல் என்றும் கிரந்தி=முடிச்சு எனவும் பொருள்படுகின்றது. இவற்றின் விளக்கத்தினை இனி நாமறிந்து மகிழ்வோம்.

கிரந்தம் என்பது ஒரு மொழி

சிறுத்தொண்டர் நாயனார் இசை நாடகம் தஞ்சை சரசுவதி மகால் நூலகப் பதிப்பாக வெளிவந்துள்ளது. அந்நாடகத்தில் கிரந்தம் என்பது மொழி சார்ந்த சொல்லாகச் சுட்டப்பட்டுள்ளது. ''**செந்தமிழோடு கிரந்தமும் ஓதுவேன், ஐயமில்லாமல் பதினெண்பாஷையறிவிப்பேன்** '' என்பதே அச்சொற்றொடராகும். எனவே அந்த இசை நாடகக் கூற்றுப்படி கிரந்தம் என்பதால் சம்ஸ்க்ருதமொழி குறிக்கப்பெறுவது புலனாகிறது.[1] இந்த சம்ஸ்க்ருத மொழியோடு பிறமொழிகளைக் கலந்து பயன்படுத்துதலை மணிப்பிரவாளம் என்பர்.

மணிப்பிரவாளம்

மணிப்பிரவாளம் என்றால் பச்சை மணியும் முத்தும் விரவிக்கோத்ததுபோல் ஒரு மொழியோடு பிறமொழிச்சொற்களைப் பயன்படுத்தும்முறை ஆகும். "கனமணியோடு ஒண் மாதுளம்பூ இடைவிரவிக்கோத்த"[2] எழிலார்ந்த நடை என்னலாம். இந்த மணிப்பிரவாள நடையை முதன்முதலில் உருவாக்கியவர்கள் ஜைன பௌத்தர்கள். "இடையே வடவெழுத்தெய்தில் விரவியல் ஈண்டெதுகை நடையேதுமில்லாத மணிப்பிரவாளம்" என்கிறது வீரசோழியம்.[3] இந்நடைக்கோர் எடுத்துக்காட்டு வாசுதேவகவி இயற்றிய 'தமிழிசைப்பாடல்களும் நாட்டியப் பதங்களும்' என்ற நூலில் காணக்கிடைக்கின்றது.[4]

---

1. P.No.68/Verse -4/T.M.S.S.M.L.Thanjavur/year-1990.

2. நாலாயிரதிவ்யப்பிரபந்தம்-முதலாயிரம்-பெரியாழ்வார் திருமொழி1-3:2.

3. பௌத்தமும் தமிழும், P.No.92-95.

4. P.No.31&32 -T.M.S.S.M.L.Thanjavur.

1. தென்காஞ்சீ இவள் ஜனனதேசம் - ஜாதி
தந்த ஜாலம் குந்தகோசம் - இப்போ
கொங்கணேச்வரன் தெருவில் வாசம் - நைவ
குவலயே லாவண்யம் க்வாபி தத் சத்ருசம்.

2. இப கும்பம் இவள் தனத்துக்கீடு- தீனிகி
ஈ ஜகதுலோ லேது ஜோடு - காதில்
அபரஞ்சியால் இழைத்த தோடு - காதில்
ஆகுலமைனதி ஓ அய்யலு! நா தோடு.

3. தினகர ஸஹஸ்ர ஸமதேஜ! வாசு
தேவ கவி தினம் துதிக்கும் போஜ - நாளும்
அநேக போஸல ஸிந்துராஜ - கீர்த்தே
ஏக மகீபனருள் சகஜிராஜ.

இவ்வாறு ஒரு மொழியோடு மற்றொரு மொழியினைக் கலந்து காவியம் படைத்தலில் தமிழகத்தில் தலைசிறந்த வல்லுநர்கள் இருந்திருக்கவேண்டும். அதற்குச் சான்றாக தஞ்சைக்கு அருகிலுள்ள ஒரு சிறு கிராமமான பசுபதிகோயிலில் வாழ்ந்து வந்த அறிஞர் ஒருவரின் பெயர் 'பசுபதிகோயில் மணிப்பிரவாளம் சுப்ரமண்ய சாஸ்திரி' என்றொரு குறிப்பு மோடி ஆவணத்தில் கிடைக்கின்றது.

கிரந்த எழுத்து

கிரந்தம் எனப்படுவது ஓர் எழுத்து வகையைக் குறிக்கும். எழுத்தின் மறுபெயர்களாக அக்ஷரம், மாத்ருகா, வர்ணம் என்பவை கூறப்படுகின்றன.[1] எழுத்தின் எண்ணிக்கை குறித்து பல்வேறு கருத்துகள் உள்ளன. கிரந்த எழுத்து 8 வர்கங்களாகக் குறிக்கப்பெற்று மொத்தம் 50 எழுத்துக்களைப் பெற்றிருக்கின்றது.[2] வர்ணதீபிகா நிகண்டுவில் ஸ்வாத்மாராம யோகீந்தரர் அகராதிக்ஷகாராந்தம் என்ற கொள்கையின் அடிப்படையில் எழுத்துகள் மொத்தம் 51னைக் குறிப்பிடுகிறார். இராமசிந்தாமணி பிரச்னம்[3] ஹயக்ரீவ

---

1. ஸ்ரீ விஹகேந்திர சம்ஹிதை-13ம் அத்தியாயம்.
2. சுவடிகளின் வரலாறும் அதன் பதிப்பு முறையும் P.No.160.
3. நந்திநாகரி சுவடி அட்டவணை - T.M.S.S.M.L.Thanjavur.

ஸஹஸ்ரநாமஸ்தோத்திரம்[1], ஸ்ரீபாஞ்ராத்திராகமத்தின் விஹகேந்திர ஸம்ஹிதை, பாபாஜி ராமாஜி அவர்களின் பாலபோதவிவரம்[2] ஆகியவை இக்கருத்தினை வலியுறுத்துவதோடு விஹகேந்திர ஸம்ஹிதை 13ம் அத்தியாயத்தில் 'அக்ஷரம் த்வேக பஞ்சாசத்' (अक्षरं त्वेक पञ्चाशत्)என்ற சொற்றொடரும் காணக்கிடைக்கின்றது[3]. திருப்பெருந்துறை சிவபெருமானுக்குச் சமர்ப்பிக்கப்படும் நக்ஷத்திரமாலை, கலா, வர்ண, தத்துவ, புவன பத தீபங்களுள் வர்ணதீபம் 51 எழுத்துக்களைப் பெற்றதென்பது ஈண்டு நினைக்கத்தக்க ஒன்று[4]. 'அகராதி க்ஷகாராந்த மாத்ராவர்ண க்ருதஸ்தலாயை நம:' என்னும் சொற்றொடரின்படி எழுத்துகள் 51 என்பது உறுதி.

'கிரந்த லிபி வடமொழி எழுத்துகளின் உச்சரிப்புக்கு ஏற்றதும் தமிழ் எழுத்துகளின் சார்பும் கொண்டது. இது சோழநாட்டில்தான் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டது. தமிழ் பயின்றவர்கள் எளிதில் வடமொழியை எழுதவும் உச்சரிக்கவும், வடமொழி நூல்களைப் பயில்வதற்கும் ஏற்படுத்திக்கொண்டது. சோழர்களின் பல சாஸனங்கள் இவ்வெழுத்தில் உள்ளன. தமிழரும் வடவரும் கலந்து உறவாடிய காலத்தில் இவ்வெழுத்து தோன்றியிருக்கலாம். தமிழ்மொழி வளர்ச்சிக்கு ஊறு ஏற்படாமல் வடமொழிப் படைப்புகளையும் பாதுகாத்துத் தமிழக கலாசாரத்திற்கு புத்துயிர் அளித்தவர்கள் சோழர்கள். அதற்கு இந்த நூலகமே எடுத்துக்காட்டு' என்ற இக்கருத்தினை திரு. வ. வேணுகோபாலன் தமது நூலில் தெரிவித்துள்ளார்[5].

கிரந்த எழுத்துச்சுவடிப் பயிற்சிக்காக அமைக்கப்படுகின்ற இந்நூலில் பிராம்மீ முதலான எழுத்து வகைகளையும் சிறிது பார்ப்போம். பிராம்மீ முதலான 64 வகை எழுத்துக்களை 'லலிதவிஸ்தரம்' தெரிவிக்கின்றது.[6] லலிதவிஸ்தரம் - லிபிசாலா ஸந்தர்சன பரிவர்த்தம் என்ற 10ம் பகுதியில்

---

1. சுவடிகளின் வரலாறும் அதன் பதிப்பு முறையும், P.No.151 - 156,T.M.S.S.M.L.Thanjavur.
2. தஞ்சை மராட்டியமன்னர் மோடி ஆவணத்தின் தமிழாக்கமும், குறிப்புரையும், தொ.3, P.No.560 - 565 .
3. சுலோ. எண். 14,
4. திருத்தலங்கள் வரலாறு P.No.558 - 559.
5. தஞ்சை மன்னரும் சரசுவதி மகால் நூலகமும், P.No.76
6. P.No.11.

போதிசத்வர் பிராம்மீ(ब्राह्मी), கரோஷ்ட்டீ (खरोष्ठी), புஷ்கரஸாரீ (पुष्करसारी), அங்கம் (अङ्गम्), வங்கம் (वङ्गम्), மகதம் (मगधम्), மங்கல்யம் (मङ्गल्यम्), அங்குலீயம் (अङ्गुलीयम्), சகாரி (शकारि), பிரம்மவல்லி (ब्रह्मवल्ली), பாருஷ்ய or மானுஷ்யம் (पारुष्यम् or मानुष्यम्), திராவிடம்(द्राविडम्), கிராதம் or கிநாரி (किरातम् or किनारि), தாக்ஷிண்யம் or தக்ஷிணம் (दाक्षिण्यम् or दक्षिणम्), உக்ரம் (उग्रम्), ஸங்க்யா (संख्या), அனுலோமம் (अनुलोमम्), அவமூர்தம் or அத்ததானு (अवमूर्धम् or अद्धधानु), தரதம் (दरदम्), காஷ்யம் or காஸ்யம் (खाष्यं or खास्यम्), சீனம் (चीनम्), லூனம் (लूनम्), ஹூணம் (हूणम्), மத்யாக்ஷரவிஸ்தரம் (मध्याक्षरविस्तरम्), புஷ்பம் (पुष्पम्), தேவம் (देवं), நாகம் (नागम्), யக்ஷம் (यक्षम्), கந்தர்வம் (गन्धर्वम्), கின்னரம் (किन्नरम्), மஹோரகம் (महोरगम्), அஸுரம் (असुरम्), கருடம் (गरुडम्), ம்ருகசக்ரம் (मृगचक्रम्), வாயஸருதமருத்(वायसरुतमरुत्), பௌமதேவம் (भौमदेवम्), அந்தரிக்ஷதேவம் (अन्तरिक्षदेवम्), உத்தரகுருத்வீபம் (उत्तरगुरुद्वीपम्), அபரகோடானீ (अपरगोडानी), பூர்வவிதேஹம் (पूर्वविदेहम्), உத்க்ஷேபம் (उत्क्षेपम्), நிக்ஷேபம் (निक्षेपम्), விக்ஷேபம் (विक्षेपम्), பிரக்ஷேபம்(प्रक्षेपम्), ஸாகரம் (सागरम्), வஜ்ரம் (वज्रम्), லேகபிரதிலேகம் (लेखप्रतिलेखम्), அனுத்ருதம் (अनुद्रुतम्), சாஸ்த்ராவர்த்தகணனாவர்தௌ (शास्त्रावर्तगणनावर्तौ), உத்க்ஷேபாவர்த்தாம் (उत्क्षेपावर्ताम्), நிக்ஷேபாவர்த்தாம் (निक्षेपावर्ताम्), பாதலிகிதம் (पादलिखितम्), த்விருத்தரபதஸந்தி: (द्विरुत्तरपदसन्धिः), யாவத்தசோத்தரபதஸந்தி: (यावद्दशोत्तरपदसन्धिः) மத்யாஹாரிணீ (मध्याहारिणी), ஸர்வருதஸங்க்ரஹணீ (सर्वरुतसंग्रहणी), வித்யானுலோமவிமிச்ரிதம் (विद्यानुलोमविमिश्रितम्), ரிஷிதபஸ்த்தப்தாம் ரோசமானாம் தரணீ ப்ரேக்ஷிணீ (ऋतपस्तप्तां रोचमानां धरणीप्रेक्षिणी), ககனப்ரேக்ஷிணீ (गगनप्रेक्षिणी) ஸர்வௌஷதிநிஷ்யந்தா (सर्वौषधिनिष्यन्ता), ஸர்வஸாரஸங்க்ரஹணீ (सर्वसारसङ्ग्रहणी) ஸர்வபூதருதக்ரஹணீ (सर्वभूतरुतग्रहणी) என்கிற 64 வகை எழுத்து வகைகளைக் குறிப்பிட்டு இவற்றுள் எதனை போதிக்கவிரும்புகிறீர்கள்' எனக்கூறி விச்வாமித்திர தாரகாசார்யரை வியப்பிலாழ்த்துகிறார். இதிலிருந்து கிரந்தலிபி திராவிடம் என்ற குடும்பத்தினைச் சார்ந்ததாகலாம் என்பது எழுத்தியல் வல்லுநர்களின் கருத்து.

எழுத்துப்பயிற்சியினைத் தொடங்குவதற்கு முன் ' ஹரி: ஓம் நமோ நாராயணாய ஸித்தம்'[1] என்று எழுதுவது வழக்கமாக உள்ளது. சிறுத்தொண்டர் நாயனார் இசை நாடகத்தில் "குழந்தாய் வாடா! வேழமுகனை எண்ணி குட்டிக்கொள், ஸரஸ்வதியைக் கும்பிடு, வேலவனைத் தெண்டம் பண்ணு,

1. இந்நூல்(கிரந்தபாலபாடமாலா) P.No.16.

ஹரி ஓம் என்று சொல்" என அக்ஷரஞானம் செய்விக்கும் முறை கூறப்பட்டுள்ளது[1]. "ஆரியரும் வேதியரும் ஹரி நமோவென்றெழுதி, ஹரி ஹரியென்றெழுதி அர்ச்சிப்பார் என்னையவர் ஹரிச்சுவடி என்னாலே" என்பதாக பனைமரம் தான் வளர்ந்த சேதிதனை உரைப்பதாகப் பனைமர சோபனம் விளக்குகிறது. அதனால்தான் இன்றைக்கும் எழுத்தறிவிக்கும் நூலை 'அரிச்சுவடி' என்றழைக்கின்றனர். மேலும் பனை தன் வரலாறு கூறும் முகமாக தூதோலை, சீட்டோலை, பல சாஸ்திரங்கள் எழுதப்படும் எழுத்தோலை, எழுத்தாணி கூண்டு ஆகியவற்றைக்குறிப்பிட்டு, காம்பு நறுக்குதல், கணுக்காம்பு வேரறுத்தல், பக்கம் இருபுறம் வாரி பல் வரிசைக் காம்பரிதல் போன்ற எழுதுபொருளாக்குதல் பணியையும், மஞ்சள் படுத்துதல் என எழுதுபொருட்பாதுகாப்பினையும் எடுத்துரைக்கப்படுகின்றது[2].

கிரந்த எண்ணிக்கை[3]

தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் காணப்படும் சுவடிகளின் மேல் பெரும்பாலும் கிரந்தம் ग्रन्थ என்ற குறிப்பும் அருகில் ஒரு எண்ணிக்கையும் கொடுக்கப்பட்டிருக்கும். எடு. B. 2442/D.214 Sakala Samhita-Pavamana/ Sheets-55/Granthas-526[4].

இந்த ஏட்டின் மொத்தபக்கங்கள் 110 x பக்கமொன்றின் வரிகள் 6 x ஒருவரிக்குண்டான எழுத்துக்கள் 25.5 x ஆகியவற்றை பெருக்கி வரும் 16830 எண்ணிக்கையினை 32ல் வகுக்க முகப்பு அட்டையில் கொடுக்கப்பட்ட 526 என்பதின் பொருள் விளங்கும். 32 என்பது ஒரு கிரந்தத்தினைக் குறிக்கும். $110 \times 6 \times 25.5 = 16830 \div 32 = 525.9375$ என்கிறபடி கிரந்தம் ஒருநூலின் முழுப்பரிமாணத்தை அளவிடவல்லது. கிரந்தங்கள் எழுதி ஊதியம் பெற்றோர் குறிப்பினை மோடி ஆவணத்தின் வழி 'சுவடிகளின் வரலாறும் அதன் பதிப்பு முறையும்' நூலில் காணலாம்[5]. நூலின் முழுப்பரிமாணம் ஆகிய கிரந்தத்தை அறிவதில் கடபயாதி ஸங்க்யை பயன்படுத்தப்பட்டுள்ளது. கடபயாதி ஸங்க்யைக்கு எடுத்துக்காட்டாக ஸ்ரீ பத்ம சக்ரமும் அதன் வழி

1. சிறுத்தொண்டர் நாயனார் இசை நாடகம்-P.No.69 line 12 - 14.
2. பனைமர சோபனம்,P.No.4 - 7. திருப்போரூர் T.கோபால் நாயக்கர், சென்னை, 1914,
3. சுவடிகளின் வரலாறும் அதன் பதிப்பு முறையும் P.No.141&Marathi Manuscripts Catalogue Vol.I Intro.P.No. 6.
4. Descriptive Catalogue of Sanskrit Manuscripts Vol.I - P.No. 123.
5. See P.No.19-20.

கிரந்தமறிவதற்கு வால்மீகி இராமாயணம் - யுத்த காண்டத்தின் சுவடி எழுத்தாளர் தரும் சுலோகமும் கொடுக்கப்படுகிறது. பத்ம சக்ரத்தின் தியான சுலோகம்-

वन्देयाम्बुजवल्लिकासहचरं सौन्दर्यपुर्याःपतिं
वन्द्यं केशवमादिमं वरगुणं श्रीपद्मचक्रं तथा ।
अम्बायाः पुरतःस्थितं नतजने लक्ष्मी कटाक्षार्थकं (कटाक्षप्रदं ?)
युक्तं तत् विभुसंख्यकैश्च विभुना बोधं ग्रहाणां गतैः ।।

என்றவாறமைகிறது. இதிலுள்ள விபுஸங்க்யை என்ற சொல் கடபயாதி ஸங்க்யையின் துணையோடு 44 எனும் எண்ணிக்கையைத் தருவதுடன் பத்மசக்ரத்தில் உள்ள பத்மதளங்கள் அல்லது தாமரை இதழ்கள் மொத்தம் 44 என்ற முடிவினையும் கொடுக்கின்றது.

மேலும் யுத்தகாண்ட சுவடி எழுத்தாளர் தரும்

கிரந்தாஸ்யுர் பாலகாண்டே நிஜகுரகணிதா மாயாபாவாத்வித்யே-
ரங்கேஸாரீ த்ருதீயே நரஸுரகணிதா: ஸ்யுச்சதுர்த்தே ச காண்டே।
க்யாதா: ஶ்ரீ சுந்தராக்யே தனுநக கணிதா நாதலா(நாகஜா?)மாசஷ்ஷ்ட்டே-
ஸ்த்தாயீ நாகீபரஸ்மின் நனுபர இதி ஸ்யாத்ஸமஸ்தா ச ஸங்க்யா ॥

என்கிற சுலோகத்தைக்கொண்டும், ஏழு காண்டங்களுக்கு முறையே 2280, 4415, 2732,2720, 3006, 5830, 3017 எனக் கொடுக்கப்பட்ட எண்ணிக்கையைக் கூட்டிப்பார்த்தாலும் 24000 சுலோக பரிமாணத்தை யுடையது வால்மீகி இராமாயணம் என அறியமுடியும். மேலும் விளக்கத்திற்கு இந்நூற்பக்க எண் 247னை பார்க்கவும்.

பதிப்பின் நோக்கம்

கிரந்த எழுத்துப்பயிற்சிக்காக 1907ல் 'ஸம்ஸ்க்ருத பிரதமசிக்ஷா' என்னும் நூலை ஒரகடம் கந்தாடை வீரராகவாச்சாரியாரால் உருவாக்கப் பட்டது. முதற்பாகம் மட்டுமே கிடைத்துள்ளது. அதைப்பின்பற்றி பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாஸ சாஸ்திரி, சென்னை அவர்கள்1945ல் அதே பெயரில் இரண்டாவது நூலை வெளியிட்டுள்ளார். பிறகு 'ஸம்ஸ்க்ருத பிரதமபாடம்' என்ற மூன்றாவது நூலும், 'கிரந்தபாலபாடம்' அல்லது 'கிரந்தபாலபாடமாலா' என்னும் நூல் 1989ல் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரி, ஹெரிடேஜ் இந்தியா எஜுகேஷனல்

டிரஸ்ட், சான்ஸ்க்ரீட் காலேஜ் மைலாப்பூர், சென்னை வழியாக நான்காவது நூலும் வெளிவந்துள்ளன. அதைக்காட்டிலும் வேறான 'கிரந்த பாலபாடமாலா' என்ற நூலிலிருந்து 108 பக்கங்களைப் பிரதிசெய்து தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் 1990 ஆம் ஆண்டு தொடங்கி நடைபெற்றுவரும் கிரந்த எழுத்துப் பயிற்சிவகுப்பில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு அளிப்பது வழக்கம். பயிற்சிவகுப்பில் பயின்றோரில் ஒருவர் அதனை இணையதளத்தில் பதிவிட்டுள்ளார். இதுவரை அளித்துவந்த பிரதியைக்காட்டிலும் பழமையானதும் முழுமையற்றதுமான 87 பக்கங்களைப்பெற்ற ஒரு பிரதி கிடைக்கப்பெற்றுள்ளது. அதனை இணைத்து ஆண்டுதோறும் இந்நூலகத்தில் மேற்கொள்ளப்படும் கிரந்த எழுத்துப் பயிற்சிவகுப்பிற்கு ஒரு நூல் தயாரிக்கப்படவேண்டும் என்பதே இப்பதிப்பின் நோக்கமாகும்.

பதிப்பு முறை

'கிரந்த எழுத்துச் சுவடிப்பயிற்சி கையேடு' எனும் இந்தநூல் முதலில் கிரந்த எழுத்துக்களை எவ்வாறு எழுதிப் பழகவேண்டும் என்ற பயிற்சியோடு தொடங்குகிறது. மேலும் 3/18 & 3/9 என்ற வகையில் கட்டங்கள் இட்டுக் காட்டப்பட்டுள்ளது. எனவே மூன்று மூன்று எழுத்துக்களை இப்பகுதியிலிருந்து பிரித்தெடுத்து தேவையான கட்டங்களை அமைத்துக்கொண்டு எழுத்துக்களை எழுதிப் பழகவழி கூறப்பட்டுள்ளது. பயிற்சிக்காக பல பழைய அச்சுநூல்களின் பகுதிகள், எண்களைக் குறிக்கின்ற வகையில் கிரந்த எழுத்திலமைந்த பஞ்சாங்கம், நாட்காட்டிக் குறிப்புகள், செய்யுள் மற்றும் உரைநடைப்பகுதிகள் தமிழும் சம்ஸ்க்ருதமுமாய் மணிப்பிரவாள நடையில் கிடைத்த கைவர்த்தகன்யா பாணிகிரஹணம் எழுத்துக்களைக் குறிப்பிடும் விஹகேந்திர சம்ஹிதையின் 13ம் அத்யாயம் மற்றும் முத்தய தண்டநாதன் ப்ரசஸ்தி, மந்திரங்கள் கூறும் காகிதச்சுவடிப்பகுதிகள், கிரந்த மணிபிரவாள தெலுங்குமொழி ஓலைச்சுவடிப்பகுதிகள், கிரந்த எழுத்தில் கல்வெட்டு, செப்பேடு, உலோகச்சிலைப்பகுதிகள் போன்றவை இணைக்கப்பட்டு விளங்குவதோடு இந்நூல் கிரந்த பாலபாடமாலா பகுதியினையும் கொண்டு திகழ்கிறது.[1] குறிப்பிட்ட கால அளவில் மேற்கொள்ளும் இப்பயிற்சி தொடர்ந்து நீடிக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் ஆண்டு வாரியாக கிடைக்கும் கிரந்த எழுத்துச் சுவடிப்பட்டியலும், கிரந்த எழுத்துப் புத்தகங்களின் பட்டியலும் இத்துடன் இணைத்து பதிப்புப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

---

1. Text P.No.15 - 102.

நன்றியுரை

' கிரந்த எழுத்துச் சுவடிப்பயிற்சி கையேடு' என்னும் தலைப்பில் பதிப்புப்பணி மேற்கொள்ள ஆணை வழங்கிய மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நூலக இயக்குநர் திரு. ஆ. அண்ணாதுரை, இ.ஆ.ப. அவர்களுக்கும், நூலக முன்னாள் நிருவாக அலுவலர் திருமதி அ. பூங்கோதை, M.A., அவர்களுக்கும், மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர்(பொது) மற்றும் நூலக நிருவாக அலுவலர் திரு. இரா. ஜெய்னுலாப்தீன் அவர்களுக்கும், நூலகர் முனைவர் எஸ். சுதர்ஷன். M.A.,B.Lit.,M.L.I.S.Ph.D., அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பதிப்பிற்கு அடிப்படையான மிகப்பழமைவாய்ந்த 'கிரந்தபாடமாலா' நூலினைத்தந்துதவிய ஓடாச்சேரி திரு. பாலகிருஷ்ண பட்டாச்சாரியார், M.A., அவர்களுக்கும், இப்பணிக்கு துணைபுரிந்த இந்நூலக மராத்தி பண்டிதர் திரு. B.ராமச்சந்திரன் அவர்களுக்கும், இப்பதிப்பில் இடம்பெற்றுள்ள சுவடிகள், நூல்கள் அன்பளிப்பாக அளித்தோருக்கும், திருவரங்கம் கோயில் பஞ்சாங்கத்தின் நகல் மற்றும் 1907ல் வெளிவந்த 'ஸம்ஸ்க்ருத பிரதமசிக்ஷா' என்னும் நூலையும் அளித்த முன்னாள் கிரந்த எழுத்துப்பயிற்சி மாணவர் ஸ்ரீரங்கம் திரு. L. ஸ்ரீவத்ஸன் அவர்களுக்கும், லக்ஷ்மி 108 நாமாவளியை கையால் வரைந்தளித்த முன்னாள் கிரந்த எழுத்துப்பயிற்சி மாணவர் திரு. ராமசந்தானம் அவர்களுக்கும், பத்மசக்ரமளித்த தினமணி நிருபர் S.வெங்கட்ராமன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை உரித்தாக்குகின்றேன்.

இப்பதிப்பு செவ்வனே வெளிவரத்துணைநின்ற நூலக அச்சகத்தாருக்கும், நூற்கட்டுப்பிரிவினருக்கும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்நூல் எழுத்தியல் வல்லுநர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பெரிதும் பயன் தரும்.

தஞ்சாவூர்
17-03-2017

முனைவர். ஆ. வீரராகவன்
சம்ஸ்க்ருத பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம்,தஞ்சாவூர்.

பொருளடக்கம்

		பக்க எண்
1.	**கிரந்தஎழுத்துக்கள்**	**001-002**
2.	**எழுதுமுறைப் பயிற்சி**	**003-014**
2.1	கிரந்தஎழுத்து எழுதுமுறைப்பயிற்சி	003-010
2.2	சிவலிங்கக் காசினுள் எழுத்து	011-013
2.3	தமிழ் எழுத்துகள்	000-014
3.	**பாடமாலா**	**015-104**
3.1	கிரந்தபாலபாடமாலா	015-102
3.2	கிரந்தஎண்கள் - பஞ்சாங்கம்	103-104
4.	**அச்சுநூல் கிரந்த எழுத்துப் பயிற்சி**	**105-181**
4.1	கருட 108 நாம ஸ்தோத்ரம் -கிரந்தம் & தமிழ்	105
4.2.1	யதிராஜவிஜயநாடகம் - கிரந்தம்	106
4.2.2	யதிராஜவிஜயநாடகம் - தமிழ்	107
4.2.3	யதிராஜவிஜயநாடகம் - தெலுங்கு	108
4.2.4	யதிராஜவிஜயநாடகம் - தேவநாகரி	109-110
4.3.1	ஸ்ரீ வேதாந்ததேசிககத்யம் - கிரந்தம்	111-116
4.3.2	ஸ்ரீ வேதாந்ததேசிககத்யம் - தமிழ்	117-121
4.3.3	ஸ்ரீ வேதாந்ததேசிககத்யம் - தெலுங்கு	122-125
4.4.1	விஹகேந்திர ஸம்ஹிதா - கிரந்தம்	126-130
4.4.2	விஹகேந்திர ஸம்ஹிதா - தமிழ்	131-136
4.4.3	விஹகேந்திர ஸம்ஹிதா - தேவநாகரி	137-147
4.5.1	மணிப்ரவாளம்(கைவர்த்தகன்யாபாணிக்ரஹனம்) (சம்ஸ்க்ருதம்) கிரந்தம் & தமிழ்	148-160
4.5.2	மணிப்ரவாளம்(கைவர்த்தகன்யாபாணிக்ரஹனம்) (கிரந்தஎழுத்து மட்டும் தமிழில்)	161-164
4.5.2	மணிப்ரவாளம்(கைவர்த்தகன்யாபாணிக்ரஹனம்) (முழுமை - தேவநாகரி)	165-172
4.6.1	மகாலக்ஷ்மி -108-நாமாவளி கிரந்தம்	173-176
4.6.2	மகாலக்ஷ்மி -108-நாமாவளி தமிழ்	177-178
4.7	ஸ்ரீகிருஷ்ணகர்ணாம்ருதம்- கிரந்தம் & தமிழ்	179-180
4.8	பாலநீதி - கிரந்தம், தமிழ், தேவநாகரி	181
5.	**காகிதச்சுவடி கிரந்தஎழுத்துப்பயிற்சி**	**182-196**
5.1	காகிதச்சுவடி மூட்டைகள்	182
5.2	கணபதி நாமாவளி கிரந்தம் & தமிழ்	183
5.3	சிவகவசஸ்தோத்ரம்	184
5.4	தர்க்கஸங்க்ரஹதீபிகா	185
5.5	மாககாவியம்	186
5.6	பாலிகா ஸ்தாபனம்	187-188
5.7.1	நீலகண்ட்ட பாலாசரஸ்வதீ மந்திரங்கள் - கிரந்தம்	189
5.7.2	நீலகண்ட்ட பாலாசரஸ்வதீ மந்திரங்கள் - தமிழ்	190
5.8.3	மிருத்யுஞ்ஜய கருடபஞ்சாக்ஷரமந்திரங்கள் - கிரந்தம்	191

5.8.4	மிருத்யுஞ்ஜய கருடபஞ்சாக்ஷரமந்திரங்கள் - தமிழ்	192
5.9.1	கார்த்தவீர்யார்ஜுன மந்த்ரம் - கிரந்தம்	193
5.9.2	கார்த்தவீர்யார்ஜுன மந்த்ரம் - தமிழ்	194
5.10.3	மகாலக்ஷ்மீ மூலதுர்கா மந்திரங்கள் - கிரந்தம்	195
5.10.4	மகாலக்ஷ்மீ மூலதுர்கா மந்திரங்கள் - தமிழ்	196
6.	**ஓலைச்சுவடி கிரந்தஎழுத்துப்பயிற்சி**	**197-223**
6.1	சரசுவதி மகால் நூலகம் - நூல் இருப்பு விவரமும் - ஓலைச்சுவடிகளும்	197
6.2	கிரந்தஎழுத்து ஓலைச்சுவடி	198
6.3.1	உத்ஸவே தேவதாஹ்வானம் - கிரந்தம்	199-200
6.3.1	உத்ஸவே தேவதாஹ்வானம் - தமிழ்	201-202
6.4.1	பிரச்னசிந்தாமணி - கிரந்தம்	203-206
6.4.2	பிரச்னசிந்தாமணி - தமிழ்	207-210
6.5	பகவத்கீதை - கிரந்தம் & தமிழ்	211
6.6.1	மணிப்ரவாளசாஸனம், கிரந்தம் & தமிழ்	212
6.6.2	மணிப்ரவாளசாஸனம், தமிழ்	213
6.6.3	மணிப்ரவாளசாஸனம், தேவநாகரி	214
6.7.1	சீதாகல்யாணமு-கிரந்தஎழுத்திலமைந்த தெலுங்குச்சுவடி	215-217
6.7.2	சீதாகல்யாணமு-தமிழ்	218-220
6.7.3	Sitakalyanamu-Telugu Manuscript in Granthascript	221-223
7.	**வரலாற்றுக்கிரந்தஎழுத்துப்பயிற்சி**	**224-247**
7.1	கரவந்தபுரம் எனத்தொடங்கும் கல்வெட்டு - கிரந்தம், தமிழ் &தேவநாகரி	224
7.2	பரமேச்வர எனத்தொடங்கும் கல்வெட்டு - கிரந்தம், தமிழ் &தேவநாகரி	225
7.3.1	அச்சுதராயரின் கிரந்தஎழுத்துக்கல்வெட்டு - கிரந்தம்	226
7.3.2	அச்சுதராயரின் கிரந்தஎழுத்துக்கல்வெட்டு - தமிழ்	227
7.3.3	அச்சுதராயரின் கிரந்தஎழுத்துக்கல்வெட்டு விடுபட்ட இடம் மட்டும்	228
7.4.1	ஸ்ரீ முத்தயதண்டநாதன் பிரசஸ்தி - கிரந்தம்	229-231
7.4.2	ஸ்ரீ முத்தயதண்டநாதன் பிரசஸ்தி - தமிழ்	232-233
7.5.1	கிரந்த கல்வெட்டு(கடப்பக்கல்)ஸ்ரீவேங்கடேச்வரமந்திர் புதுதில்லி	234
7.5.2	கிரந்த கல்வெட்டு(கடப்பக்கல்)ஸ்ரீவேங்கடேச்வரமந்திர் புதுதில்லி தமிழ்,தேவநாகரி	235
7.6	சிதம்பரச் செப்பேடுகள், கிரந்தம் & தமிழ்	236-238
7.7	திருச்சி வரதராஜப்பெருமாள் படிமக்குறிப்பு கிரந்தம்&தமிழ்	239-242
7.8	Grantha Manuscripts in T.M.S.S.M.Library,Thanjavur- Year 1616-1851 AD.	243
7.9	Granthakshara (Sanskrit) Printed Books in T.M.S.S.M.Library,Thanjavur.	244-245
7.10	கிரந்தமறிய கடபயாதி ஸங்க்யை	246-247
	துணைநூற்பட்டியல்	**248**

*****

𑌹𑌰𑌿𑌃 𑍐
𑌨𑌮𑍋 𑌨𑌾𑌰𑌾𑌯
𑌣𑌾𑌯 𑌸𑌿𑌦𑍍𑌧𑌂 𑍐

ஸ்வரா:-உயிர் எழுத்துக்கள்

அ ஆ இ ஈ உ ஊ

𑌅 𑌆 𑌇 𑌈 𑌉 𑌊

ரு ரூ லு ஏ ஐ

𑌋 𑍠 𑌌 𑌏 𑌐

ஓ ஔ அம் அஹ

𑌓 𑌔 𑌅𑌂 𑌅𑌃

வ்யஞ்ஜநாநி-மெய்யெழுத்துக்கள்

க க² க³ க⁴ ங

𑌕 𑌖 𑌗 𑌘 𑌙

ச ச² ஜ ச⁴ ஞ

𑌚 𑌛 𑌜 𑌝 𑌞

ட ட² ட³ ட⁴ ண

𑌟 𑌠 𑌡 𑌢 𑌣

த த² த³ த⁴ ந (ன)

𑌤 𑌥 𑌦 𑌧 𑌨

ப ப² ப³ ப⁴ ம

𑌪 𑌫 𑌬 𑌭 𑌮

ய ர-ற ல வ ச ஷ

𑌯 𑌰 𑌲 𑌵 𑌶 𑌷

ஸ ஹ ள

𑌸 𑌹 𑌳







கிரந்த சுவடி-2






ழ ஜ ஸ





ஸ்ரீ:

சிவலிங்கக் காசினுள் எழுத்து*

'தமிழகக்காசுகள்' எனும் கட்டுரையின் வழி சிவலிங்கக் காசு ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அதன் ஒரு பக்கம் இலிங்கத்தையும், மற்றொருபக்கம் நந்தியையும் பெற்றுள்ளது. நந்தி எம்பெருமானைக் காண்கின்றபொழுது இலிங்க வடிவில் இலங்குபவர் சிவபெருமான் என்பது உறுதி.

அந்த இலிங்கவடிவத்தையே சற்று ஆராய்ந்து பார்ப்போமானால் அது தமிழ், தேவநாகரி ஆகிய மொழி எழுத்தான 'க' என்பதனையும் சுட்டுவதாக அறியமுடிகின்றது. 'க' என்னும் எழுத்து எவ்வாறெல்லாம் பொருள்படுகிறது என்பதற்கு 'வர்ணதீபிகா' எனும் எழுத்துகளை விளக்கும் நிகண்டு நூலில்- க: ஸ்வபாவே விஷ்ணுரதே பரப்ரம்மணி சங்கரே । ஸூர்யே ஸுதாகரே வேணௌ ஸுரஜ்யேஷ்ட்டே ஸுகேऽபி ச ॥ कःस्वभावे विष्णुरथे परब्रह्मणि शंकरे । सूर्ये सुधाकरे वेणासुरज्येष्ठे सुखेऽपि च ॥ என்றொரு சுலோகம் காணக்கிடைக்கின்றது. பொருள்: 'க' என்ற எழுத்து முறையே ஸ்வபாவத்தையும், மாலின் தேரையும், பரம்பொருளையும், சிவபெருமானையும், கதிரவனையும், அமுதத்தினையும், மூங்கிலையும், பிரம்மதேவரையும், இன்பத்தினையும் குறிக்கின்றது. இதனால் நந்திக்கு முன்னுள்ள இலிங்கவடிவத்தை சிவபெருமான் என்பதோடு 'க' என்கிற எழுத்தினையும் அது சுட்டுவதாகத்தெரிகிறது. கல்வெட்டு கிரந்தத்திற்கு பல்லவகிரந்தம் என்ற மற்றொருபெயர். இந்த காசு முற்காலப்பல்லவர் காலத்தியதாகத் திருக்கோயிலூரிலிருந்து கிடைத்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. பிராம்மி எழுத்திலிருந்து இவ்வெழுத்தின் வளர்ச்சியின் வகைகளைக் காணும்போது 'க' எனும் கிரந்த எழுத்தின் சிறப்பு வடிவம் ஒருவாறு அறியப்படுகிறது.

'ந்ருத்தாவஸானே நடராஜராஜே நநாத டக்காம் நவபஞ்சவாரம் உத்தர்துகாமோ ஸநகாதி ஸித்தான் ஏதத்விமர்சே சிவசூத்ரஜாலம் नृत्तावसाने नटराजराजे ननाद ढक्कां नवपञ्चवारम् । उद्धर्तुकामो सनकादि सिद्धान् एतद्विमर्शे शिवसूत्रजालम् ॥ எனும் நந்திகேச்வரகாசிகையின் முதல் சுலோகத்தின்படி சிவபெருமான்

★ நன்றி: தொல்லியல் நோக்கில் தமிழகம் & தஞ்சை ஆறுமுக சீதாராமன்.





பல்லவர் காசு

முன்பக்கம் பின்பக்கம்

நடராஜராகத்தாண்டவம் புரியுங்கால் அவரது கையிலுள்ள உடுக்கையின் ஒலியிலிருந்து அ, இ,உ, ல்ரு போன்ற எழுத்துகள் அடங்கிய 14 சூத்திரங்கள் தோன்றின. 1. அஇஉண், 2. ல்ருக், 3. ஏஓங், 4. ஐஔச், 5. ஹயவரட், 6.லண், 7. ஞமஙணனம் 8. ஜபஞ். 9.கட, 10. ஜபகடதஶ் 11. கபசடதசடதவ், 12. கபய், 13. ஶஷஸர், 14. ஹல் என்பன மாகேஶ்வர சூத்ரங்கள். 1.अइउण्, 2.ऋलृक् , 3. एओङ्, 4. ऐऔच् , 5. हयवरट्, 6. लण्, 7. ञमङणनम्, 8. झभञ्, 9.घढधष्, 10.जबगडदश्, 11. खफछठथचटतव्, 12. कपय्, 13. शषसर्, 14. हल् इति माहेश्वराणि सूत्राणि । இந்த பதிநான்கு சூத்திரங்கள் தோன்ற காரணபூதராகவும் சிவபெருமானே எழுத்துருவாகவும் அறியப்படுகின்றார். ''அஇஉண்'' முதல் ''ஐஔச்'' வரை உள்ள சூத்திரத்தின் வழி அமைந்தவை **அச்சு**எழுத்துக்கள் என்றும், ''ஹயவரட்'' முதல் ''ஹல்'' வரை உள்ள சூத்திரத்தின் வழி அமைந்தவை **ஹல்** எழுத்துக்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.-

''அச: ப்ராணஸமாக்யா ஸ்யு: ஹலஸ்து ப்ராணினோ மதா: अचः प्राणसमाख्या स्युः हलस्तु प्राणिनो मताः'' என்கிற வர்ணதீபிகா நிகண்டுவின் விளக்கத்தின்படி உயிரினங்களுக்கு உயிர்போல் அச்சும், உயிரினங்களின் உடல் போல் ஹல்லும் ஆகிற எழுத்துக்கள் உயிர், மெய் எழுத்துகளாகின்றன. ''**உயிரும் உடம்புமா**'' என்ற தொல்காப்பியரின் கூற்றும் ஈண்டு நினைக்கத் தக்கது.

இப்படியாக தொல்லியல் நோக்கில் தமிழகம் நூலில் வெளியிடப்பட்ட இந்த காசு நந்தி சிவலிங்க வடிவங்களை மட்டும் போதிக்காமல் எழுத்தின் உருவத்தினையும் உட்பொதிந்து உணர்த்துகின்றது என்பதனையும் உறுதிப்படுத்துகின்றது.

******

அருள்மிகு பிரகதீஸ்வரர் - தஞ்சை பெரியகோயிலில் காணப்படும் ஓவியம்

தஞ்சைப் பெரியகோவிலில் காணப்படும் கல்வெட்டுகளில் முக்கியமானதும், கோவில் சம்பந்தமுடையதும்.



இவ் வெழுத்துக்களைக் கற்றுக்கொண்டால் தஞ்சைப் பெரிய கோவிலிலுள்ள கல்வெட்டுகளைப் படித்தலியலும்.

Consonants ↓	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
க்	க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ
ங்	ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ
ச்	ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ
ஞ்	ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ
ட்	ட	டா	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டௌ
ண்	ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ
த்	த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ
ந்	ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ
ப்	ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ
ம்	ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ
ய்	ய	யா	யி	யீ	யு	யூ	யெ	யே	யை	யொ	யோ	யௌ
ர்	ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ
ல்	ல	லா	லி	லீ	லு	லூ	லெ	லே	லை	லொ	லோ	லௌ
வ்	வ	வா	வி	வீ	வு	வூ	வெ	வே	வை	வொ	வோ	வௌ
ழ்	ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ
ள்	ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ
ற்	ற	றா	றி	றீ	று	றூ	றெ	றே	றை	றொ	றோ	றௌ
ன்	ன	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னௌ

॥ 𑌗𑍍𑌰𑌂𑌥-𑌬𑌾𑌲-𑌪𑌾𑌠𑌮𑌾𑌲𑌾 ॥

கிரந்த பால பாடமாலா

𑌯𑌾 𑌕𑍁𑌨𑍍𑌦𑍇𑌨𑍍𑌦𑍁𑌤𑍁𑌷𑌾𑌰𑌹𑌾𑌰𑌧𑌵𑌲𑌾
𑌯𑌾 𑌶𑍁𑌭𑍍𑌰𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌵𑍃𑌤𑌾
𑌯𑌾 𑌵𑍀𑌣𑌾 𑌵𑌰𑌦𑌣𑍍𑌡𑌮𑌣𑍍𑌡𑌿𑌤𑌕𑌰𑌾
𑌯𑌾 𑌶𑍍𑌵𑍇𑌤𑌪𑌦𑍍𑌮𑌾𑌸𑌨𑌾 ।
𑌯𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌚𑍍𑌯𑍁𑌤𑌶𑌂𑌕𑌰𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑌿𑌭𑌿𑌃
𑌦𑍇𑌵𑍈𑌃 𑌸𑌦𑌾 𑌪𑍂𑌜𑌿𑌤𑌾
𑌸𑌾 𑌮𑌾𑌂 𑌪𑌾𑌤𑍁 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀 𑌭𑌗𑌵𑌤𑍀
𑌨𑌿𑌃𑌶𑍇𑌷𑌜𑌾𑌡𑍍𑌯𑌾𑌪𑌹𑌾 ॥

𑌹𑌰𑌿𑌃 𑌓𑌂
𑌨𑌮𑍋 𑌨𑌾𑌰𑌾𑌯
𑌣𑌾𑌯 𑌵𑌿𑌘𑍍𑌨𑌂 ।

உயிரெழுத்துகள்

𑌅 𑌆 𑌇 𑌈 𑌉 𑌊

𑌋 𑍠 𑌌 𑍡 𑌏

𑌐 𑌓 𑌔 𑌅𑌂 𑌅𑌃

மெய்யெழுத்துகள்

𑌕 𑌖 𑌗 𑌘 𑌙

𑌚 𑌛 𑌜 𑌝 𑌞

𑌟 𑌠 𑌡 𑌢 𑌣

𑌤 𑌥 𑌦 𑌧 𑌨

𑌪 𑌫 𑌬 𑌭 𑌮

𑌯 𑌰 𑌲 𑌵 𑌶

𑌷 𑌸 𑌹 𑌳 𑌕𑍍𑌷

மெய்யெழுத்துக்கள்



உயிரெழுத்துக்குறிகளாவன



உயிர் மெய்யெழுத்துக்கள்

க கா கி கீ கு கூ க்ரு க்ரூ

க்லு கே கை கோ கௌ கம் க:

இதுபோலவே மற்ற உயிர் மெய்யெழுத்துக்களும் என்று அறியவும்.

கூட்டெழுத்துக்கள்



"யகாரம்" சேர்ந்த எழுத்துக்கள்

க்ய ச்ய ட்ய த்ய வ்ய முதலியன

ரகாரம் சேர்ந்த எழுத்துக்கள்

க்ர ச்ர ட்ர த்ர ப்ர முதலியன

முதலில் ரகாரம் சேர்ந்த எழுத்துக்கள்

ர்க ர்ச ர்ட ர்த ர்வ முதலியன

பாடம்-1

ஸம்ஸ்க்ருத பாஷையில் உபயோகிக்கப்படும் சொற்களைப் பெரும்பாலும் மூன்றுவிதமாக பாகு படுத்தலாம் — பெயர்ப்பகுதிகள், வினைப்பகுதிகள், அவ்யயங்கள்.

பெயர்ப்பகுதிகள் — ஆண்பால், பெண்பால், ன்றன் பால் [அலி] என மூன்று விதம். ்வொன்றும் விரிவடைந்து ஏழு வேற்றுமை டன் உபயோகிக்கப்படுகின்றன. வாக்யத்தின் ழுவாய், செய்வினையில்—முதல் வேற்றுமையில் அமையும். செயப்பாட்டு வினையில் — மூன்றும் வேற்றுமையில் அமையும். உயிரெழுத்தில் முடிவுறும் பெயர் சொற்களை 'அஜந்தங்கள்' என்றும், மெய்யெழுத்தில் முடிவுறும் பெயர் ற்களை 'ஹலந்தங்கள்' என்றும் கூறுவர்.

உதாஹரணம்: '𑌰𑌾𑌮' என்ற பெயர்ச்சொல் '𑌅' என்ற உயிரெழுத்தில் முடிவதால் இதை 'அஜந்தம்' என்றும்—𑌜𑌲𑌮𑍁𑌚𑍍 என்ற பெயர்ச்சொல் '𑌚𑍍' என்ற மெய்யெழுத்தில் முடிவதால் இதை '𑌹𑌲𑌨𑍍𑌤𑌃' என்றும் கூறுவர்.

𑌅𑌕𑌾𑌰𑌾𑌨𑍍𑌤𑌃 𑌪𑍁𑌂𑌲𑌿𑌙𑍍𑌗𑍋 𑌰𑌾𑌮𑌶𑌬𑍍𑌦𑌃

	ஒருமை	இருமை	பன்மை
1	𑌰𑌾𑌮𑌃 ராமன்	𑌰𑌾𑌮𑍌	𑌰𑌾𑌮𑌾𑌃
2	𑌰𑌾𑌮𑌂 ராமனை	𑌰𑌾𑌮𑍌	𑌰𑌾𑌮𑌾𑌨𑍍
3	𑌰𑌾𑌮𑍇𑌣 ராமனால்	𑌰𑌾𑌮𑌾𑌭𑍍𑌯𑌾𑌂	𑌰𑌾𑌮𑍈𑌃
4	𑌰𑌾𑌮𑌾𑌯 ராமனின் பொருட்டு	𑌰𑌾𑌮𑌾𑌭𑍍𑌯𑌾𑌂	𑌰𑌾𑌮𑍇𑌭𑍍𑌯𑌃
5	𑌰𑌾𑌮𑌾𑌤𑍍 ராமனிடமிருந்து	𑌰𑌾𑌮𑌾𑌭𑍍𑌯𑌾𑌂	𑌰𑌾𑌮𑍇𑌭𑍍𑌯𑌃
6	𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 ராமனுடைய	𑌰𑌾𑌮𑌯𑍋𑌃	𑌰𑌾𑌮𑌾𑌣𑌾𑌂
7	𑌰𑌾𑌮𑍇 ராமனிடத்தில்	𑌰𑌾𑌮𑌯𑍋𑌃	𑌰𑌾𑌮𑍇𑌷𑍁
*8	𑌹𑍇 𑌰𑌾𑌮 ஏ ராமா	𑌹𑍇 𑌰𑌾𑌮𑍌	𑌹𑍇 𑌰𑌾𑌮𑌾𑌃

* 8. இது முதல் வேற்றுமையின் உட்பிரிவாகவே கருதப்படுவதால் ஸம்ஸ்க்ருதத்தில் ஏழு வேற்றுமைகள் தான்

இது போலவே கீழே கொடுக்கப்பட்டிருக்கும் '𑌅𑌕𑌾𑌰𑌾𑌨𑍍𑌤' புல்லிங்க சப்தங்களை மனப்பாடம் செய்யவும்.

𑌅𑌜𑌃	𑌕𑍂𑌰𑍍𑌮𑌃	𑌘𑌟𑌃
ஆடு	ஆமை	குடம்
𑌅𑌶𑍍𑌵𑌃	𑌕𑌟𑌃	𑌚𑌟𑌕𑌃
குதிரை	பாய்	ஊர்க்குருவி
𑌅𑌨𑍁𑌜𑌃	𑌕𑌵𑌾𑌟𑌃	𑌜𑌾𑌮𑌾𑌤𑌾
தம்பி	கதவு	மாப்பிள்ளை
𑌅𑌗𑍍𑌰𑌜𑌃	𑌕𑌪𑍋𑌤𑌃	𑌚𑌾𑌪𑌃
தமையன்	புரு	வில்
𑌆𑌮𑍍𑌰𑌃	𑌕𑍀𑌟𑌃	𑌜𑌨𑌃
மாமரம்	புழு	மனிதன்
𑌆𑌕𑌾𑌶𑌃	𑌕𑍇𑌶𑌃	𑌜𑌨𑌕𑌃
ஆகாயம்	தலைமயிர்	தந்தை
𑌉𑌪𑌲𑌃	𑌕𑍋𑌷𑍍𑌠𑌃	𑌤𑌾𑌲𑌃
சிறிய கல்	ரூம்-அறை	பனைமரம்
𑌉𑌰𑌗𑌃	𑌕𑍋𑌕𑌿𑌲𑌃	𑌦𑌣𑍍𑌡𑌃
பாம்பு	குயில்	தடி
𑌉𑌷𑍍𑌟𑍍𑌰𑌃	𑌖𑌲𑌃	𑌦𑍀𑌪𑌃
ஒட்டகம்	துஷ்டன்	விளக்கு
𑌕𑌾𑌕𑌃	𑌗𑌜𑌃	𑌦𑌨𑍍𑌤𑌃
காக்கை	யானை	பல்
𑌕𑌾𑌲𑌃	𑌗𑍋𑌪𑌃	𑌦𑍇𑌵𑌃
காலம்—யமன்	இடையன்	தேவன்

𑌦𑍇𑌹𑌃
தேஹம்

𑌘𑌟𑌃
கடமை

𑌧𑌵𑌃
கணவன்

𑌨𑌖𑌃
நகம்

𑌨𑌟𑌃
நட்டுவன்

𑌨𑌾𑌪𑌿𑌤𑌃
அம்பட்டன்

𑌨𑍃𑌪𑌃
அரசன்

𑌪𑌨𑌸𑌃
பலாமரம்

𑌪𑍁𑌤𑍍𑌰𑌃
மகன்

𑌬𑌕𑌃
கொக்கு

𑌬𑌾𑌲𑌃
பையன்

𑌭𑌷𑌕𑌃
நாய்

𑌭𑍇𑌕𑌃
தவளை

𑌮𑌠𑌃
மடம்

𑌮𑌯𑍂𑌰𑌃
மயில்

𑌮𑌾𑌷𑌃
உளுந்து

𑌮𑍂𑌕𑌃
ஊமை

𑌮𑍋𑌦𑌕𑌃
கொழுக்கட்டை

𑌯𑌾𑌚𑌕𑌃
யாசிப்பவன்

𑌯𑍋𑌧𑌃
சேனை வீரன்

𑌰𑌜𑌕𑌃
வண்ணான்

𑌰𑌥𑌃
தேர்

𑌲𑍇𑌖𑌕𑌃
எழுதுகிறவன்

𑌵𑌟𑌃
ஆலமரம்

𑌵𑌾𑌤𑌃
காற்று

𑌵𑌿𑌪𑍍𑌰𑌃
பிராம்மணன்

𑌵𑌿𑌹𑌗𑌃
பறவை

𑌵𑍃𑌦𑍍𑌧𑌃
வயோதிகன்

𑌵𑍈𑌦𑍍𑌯𑌃
வைத்தியன்

𑌵𑌤𑍍𑌸𑌃
குழந்தை,
பசுங்கன்று

𑌵𑍃𑌷𑌭𑌃
காளைமாடு

𑌵𑍍𑌯𑌾𑌧𑌃
வேடன்

𑌶𑌶𑌃
முயல்

𑌶𑌰𑌃
பாணம்

𑌶𑌕𑌟𑌃
வண்டி

𑌶𑌾𑌰𑍍𑌦𑍂𑌲𑌃
புலி

𑌶𑍁𑌕𑌃
கிளி

𑌶𑍍𑌲𑍋𑌕𑌃
ஸ்லோகம்

𑌸𑌰𑌟𑌃
ஓணான்

𑌸𑌰𑍍𑌪𑌃
பாம்பு

𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌃
ஸமுத்திரம்

ஸங்க்யா:	ஹம்ஸ:	ஹஸ்த:
எண்ணம்	அன்னப்பறவை	கை
ஸேவக:	ஹரிண:	
வேலையாள்	மான்	

பாடம்-2

இகாராந்த: பும்லிங்கோ ஹரி சப்த:

ஒருமை	இருமை	பன்மை
ஹரி:	ஹரீ	ஹரய:
விஷ்ணு		
ஹரிம்	ஹரீ	ஹரீன்
விஷ்ணுவை		
ஹரிணா	ஹரிப்யாம்	ஹரிபி:
விஷ்ணுவால்		
ஹரயே	ஹரிப்யாம்	ஹரிப்ய:
விஷ்ணுவின்பொருட்டு		
ஹரே:	ஹரிப்யாம்	ஹரிப்ய:
விஷ்ணுவிடமிருந்து		
ஹரே:	ஹர்யோ:	ஹரீணாம்
விஷ்ணுவினுடைய		
ஹரௌ	ஹர்யோ:	ஹரிஷு
விஷ்ணுவினிடத்தில்		
ஹே ஹரே	ஹே ஹரீ	ஹே ஹரய:
ஏ விஷ்ணுவே		

இது போலவே கீழே கொடுக்கப்பட்டிருக்கும் 'இகாராந்த' புல்லிங்கச் சொற்களை மனனம் செய்யவும்.

அக்நி:	அச்வாரி:	கவி:
நெருப்பு	எருமைக்கடா	புலவன்
அங்க்ரி:	ஆதி:	கிரி:
கால்-பாதம்	மனோவியாதி	பன்றி
அஞ்ஜலி:	ஆசுசுக்ஷணி:	க்ருமி:
கைகூப்புதல்	நெருப்பு	புழு
அஜினயோநி:	உததி:	கிரி:
மான்	ஸமுத்திரம்	மலை
அதிதி:	உமாபதி:	க்ரந்தி:
விருந்தாளி	சிவன்	முடிச்சு
அதிபதி:	உருகாரி:	ஜலதி:
யஜமானன்	காக்கை	ஸமுத்திரம்
அப்தி:	உஷாபதி:	தாசரதி:
ஸமுத்திரம்	அநிருத்தன்	ராமன்
அப்ஜயோநி:	ருஷி:	தூர்ஜடி:
பிர்ம்மா	முனிவர்	சிவன்
அராதி:	ருஷ்டி:	த்வநி:
சத்துரு	கத்தி	சப்தம்
அரி:	கபி:	நாபி:
சத்துரு	குரங்கு	தொப்புள்
அலி:	கலி:	நரபதி:
வண்டு	சண்டை; கலிபுருஷன்	அரசன்

பத்தி:	ருஷி:	வ்யாதி:
காலாட்படை	முனிவர்	உடல் நோய்
பாணி:	யதி:	ஶுசி:
கை	சன்யாசி	நெருப்பு
மணி:	ரவி:	ஸாரதி:
இரத்னம்	சூரியன்	தேரோட்டி
ருசி:	வஹ்னி:	ஹரி:
கிரணம்	நெருப்பு	விஷ்ணு, சிங்கம் குதிரை, பாம்பு குரங்கு, கிளி

பாடம்-3

உகாராந்த: பும்லிங்க: ஶம்பு ஶப்த:

ஒருமை	இருமை	பன்மை
ஶம்பு: சிவன்	ஶம்பூ	ஶம்பவ:
ஶம்பும் சிவனை	ஶம்பூ	ஶம்பூன்
ஶம்புனா சிவனால்	ஶம்புப்யாம்	ஶம்புபி:
ஶம்பவே சிவன் பொருட்டு	ஶம்புப்யாம்	ஶம்புப்ய:
ஶம்போ: சிவனிடமிருந்து	ஶம்புப்யாம்	ஶம்புப்ய:

ஶம்போ: ஶம்ப்வோ: ஶம்பூநாம்
சிவனுடைய

ஶம்பௌ ஶம்ப்வோ: ஶம்புஷு
சிவனிடத்தில்

ஹே ஶம்போ ஹே ஶம்பூ ஹே ஶம்பவ:
ஏ சிவனே

இது போலவே கீழே கொடுக்கப்பட்டிருக்கும் உகாராந்த புல்லிங்கச் சொற்களை மனனம் செய்யவும்.

அம்ஶு:	ஊரு:	கிஷ்கு:
கிரணம்	தொடை	அல்பன்-முழம்
அஸு:	ருது:	க்ருஶாநு:
பிராணன்	இரண்டுமாதம் கொண்டகாலம்	நெருப்பு
அஹீஶு:	ஒது:	க்ரது:
கடிவாளம்	பூஜை	யாகம்
ஆகு:	கடு:(ஸ்)	ஶலாவு:
எலி	மணத்தக்காளி	மூஞ்சூறு
இந்து:	கஞ்சு:	குரு:
சந்திரன்	மன்மதன்	ஆசான்
இக்ஷு:	கம்பு:	ஜந்து:
கரும்பு	சங்கு	பிராணி
இஷு:	கௌடு:	ஜாயு:
அம்பு	ராஜாளி	மருந்து

𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌲𑍁𑌃 தூங்குபவன்	𑌬𑌨𑍍𑌧𑍁𑌃 உறவினன்	𑌶𑌤𑍍𑌰𑍁𑌃 விரோதி
𑌪𑌶𑍁𑌃 மிருகம்	𑌬𑌿𑌨𑍍𑌦𑍁𑌃 சொட்டு-துளி	𑌶𑌿𑌶𑍁𑌃 குழந்தை
𑌪𑌾𑌂𑌸𑍁𑌃 தூசி	𑌭𑌾𑌨𑍁𑌃 ஸூரியன்	𑌸𑍇𑌤𑍁𑌃 அணை
𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 ஐஸ்வர்யவான்	𑌭𑌿𑌕𑍍𑌷𑍁𑌃 யாசிப்பவன்	𑌸𑍂𑌨𑍁𑌃 புத்ரன்
𑌪𑌰𑌶𑍁𑌃 கோடாலி	𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌃 யமன்	𑌸𑌕𑍍𑌤𑍁𑌃 மாவு
𑌪𑍍𑌰𑌿𑌯𑌂𑌗𑍁𑌃(𑌸𑍍𑌤𑍍𑌰𑍀) ஓர்வகை தானியம்	𑌮𑍃𑌗𑌯𑍁𑌃 வேடன்	𑌸𑌾𑌧𑍁𑌃 நல்லவன்
𑌬𑌾𑌹𑍁𑌃 கை	𑌵𑌾𑌯𑍁𑌃 காற்று	𑌸𑍍𑌤𑌨𑌯𑌿𑌤𑍍𑌨𑍁𑌃 மேகம்

பாடம்-4

𑌋𑌕𑌾𑌰𑌾𑌨𑍍𑌤𑌃 𑌪𑍁𑌂𑌲𑌿𑌙𑍍𑌗𑍋 𑌧𑌾𑌤𑍃 𑌶𑌬𑍍𑌦𑌃 [A]

ஒருமை	இருமை	பன்மை
𑌧𑌾𑌤𑌾 ப்ரும்மா	𑌧𑌾𑌤𑌾𑌰𑍌	𑌧𑌾𑌤𑌾𑌰𑌃
𑌧𑌾𑌤𑌾𑌰𑌂 ப்ரும்மாவை	𑌧𑌾𑌤𑌾𑌰𑍌	𑌧𑌾𑌤𑍄𑌨𑍍

𑌧𑌾𑌤𑍍𑌰𑌾 𑌧𑌾𑌤𑍃𑌭𑍍𑌯𑌾𑌮𑍍 𑌧𑌾𑌤𑍃𑌭𑌿𑌃
ப்ரும்மாவால்

𑌧𑌾𑌤𑍍𑌰𑍇 𑌧𑌾𑌤𑍃𑌭𑍍𑌯𑌾𑌮𑍍 𑌧𑌾𑌤𑍃𑌭𑍍𑌯𑌃
ப்ரும்மாவின் பொருட்டு

𑌧𑌾𑌤𑍁𑌃 𑌧𑌾𑌤𑍃𑌭𑍍𑌯𑌾𑌮𑍍 𑌧𑌾𑌤𑍃𑌭𑍍𑌯𑌃
ப்ரும்மாவிடமிருந்து

𑌧𑌾𑌤𑍁𑌃 𑌧𑌾𑌤𑍍𑌰𑍋𑌃 𑌧𑌾𑌤𑍄𑌣𑌾𑌮𑍍
ப்ரும்மாவினுடைய

𑌧𑌾𑌤𑌰𑌿 𑌧𑌾𑌤𑍍𑌰𑍋𑌃 𑌧𑌾𑌤𑍃𑌷𑍁
ப்ரும்மாவிடத்தில்

𑌹𑍇𑌧𑌾𑌤𑌃 𑌹𑍇𑌧𑌾𑌤𑌾𑌰𑍌 𑌹𑍇𑌧𑌾𑌤𑌾𑌰𑌃
ஏ ப்ரும்மாவே

𑌋𑌕𑌾𑌰𑌾𑌨𑍍𑌤𑌃 𑌪𑍁𑌂𑌲𑌿𑌙𑍍𑌗𑌃 𑌪𑌿𑌤𑍃 𑌶𑌬𑍍𑌦𑌃 [B]

ஒருமை	இருமை	பன்மை
𑌪𑌿𑌤𑌾	𑌪𑌿𑌤𑌰𑍌	𑌪𑌿𑌤𑌰𑌃
தகப்பனார்		
𑌪𑌿𑌤𑌰𑌮𑍍	𑌪𑌿𑌤𑌰𑍌	𑌪𑌿𑌤𑍄𑌨𑍍
தகப்பனாரை		

3—7 𑌶𑍇𑌷𑌂 𑌧𑌾𑌤𑍃 𑌶𑌬𑍍𑌦𑌵𑌤𑍍

𑌹𑍇𑌪𑌿𑌤𑌃 𑌹𑍇𑌪𑌿𑌤𑌰𑍌 𑌹𑍇𑌪𑌿𑌤𑌰𑌃
ஏ தகப்பனாரே

இது போலவே கீழே கொடுக்கப்பட்டிருக்கும் ருகாராந்தப் புல்லிங்க சொற்களை மனப்பாடம் செய்யவும்.

[A]

𑌕𑌰𑍍𑌤𑌾 செய்கிறவன்	𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 பார்க்கிறவன்	𑌤𑍍𑌵𑌷𑍍𑌟𑌾 த்வஷ்டா
𑌕𑍍𑌰𑍋𑌷𑍍𑌟𑌾 நரி	𑌧𑌰𑍍𑌤𑌾 தாங்குபவன்	𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌾 காப்பாற்றுகிறவன்
𑌕𑍍𑌷𑍇𑌪𑍍𑌤𑌾 எறிகிறவன்	𑌨𑍇𑌤𑌾 தலைவன்	𑌶𑌾𑌸𑍍𑌤𑌾 ஆளுபவன்
𑌗𑌨𑍍𑌤𑌾 செல்கிறவன்	𑌨𑌪𑍍𑌤𑌾 கொள்ளுப்பேரன்	𑌤𑌾𑌡𑌯𑌿𑌤𑌾 அடிக்கிறவன்
𑌜𑍇𑌤𑌾 ஜெயிக்கிறவன்	𑌵𑌕𑍍𑌤𑌾 பேசுபவன்	𑌹𑌰𑍍𑌤𑌾 அபஹரிக்கிறவன்
𑌭𑌰𑍍𑌤𑌾 கணவன்	𑌭𑌕𑍍𑌷𑌯𑌿𑌤𑌾 சாப்பிடுகிறவன்	𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑌾 வெறுக்கிறவன்
𑌦𑌾𑌤𑌾 கொடுப்பவன்	𑌬𑍋𑌦𑍍𑌧𑌾 அறிகின்றவன்	

[B]

𑌜𑌾𑌮𑌾𑌤𑌾 மாப்பிள்ளை   𑌭𑍍𑌰𑌾𑌤𑌾 ஸஹோதரன்

பாடம்-5

𑌆𑌕𑌾𑌰𑌾𑌨𑍍𑌤𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌲𑌿𑌙𑍍𑌗𑌃 𑌰𑌮𑌾 𑌶𑌬𑍍𑌦𑌃 லக்ஷ்மீ

ஒருமை	இருமை	பன்மை
𑌰𑌮𑌾	𑌰𑌮𑍇	𑌰𑌮𑌾𑌃
𑌰𑌮𑌾𑌂	𑌰𑌮𑍇	𑌰𑌮𑌾𑌃

𑌰𑌮𑌯𑌾	𑌰𑌮𑌾𑌭𑍍𑌯𑌾𑌂	𑌰𑌮𑌾𑌭𑌿𑌃
𑌰𑌮𑌾𑌯𑍈	𑌰𑌮𑌾𑌭𑍍𑌯𑌾𑌂	𑌰𑌮𑌾𑌭𑍍𑌯𑌃
𑌰𑌮𑌾𑌯𑌾𑌃	𑌰𑌮𑌾𑌭𑍍𑌯𑌾𑌂	𑌰𑌮𑌾𑌭𑍍𑌯𑌃
𑌰𑌮𑌾𑌯𑌾𑌃	𑌰𑌮𑌯𑍋𑌃	𑌰𑌮𑌾𑌣𑌾𑌮𑍍
𑌰𑌮𑌾𑌯𑌾𑌂	𑌰𑌮𑌯𑍋𑌃	𑌰𑌮𑌾𑌸𑍁
𑌹𑍇 𑌰𑌮𑍇	𑌹𑍇 𑌰𑌮𑍇	𑌹𑍇 𑌰𑌮𑌾𑌃

இது போலவே கீழே கொடுக்கப்பட்டிருக்கும் ஆகாராந்த ஸ்த்ரீலிங்க சொற்களை மனனம் செய்யவும்.

𑌅𑌨𑍁𑌜𑍍𑌞𑌾 அனுமதி	𑌕𑍃𑌪𑌾 கருணை	𑌘𑌣𑍍𑌟𑌾 மணி
𑌆𑌜𑍍𑌞𑌾 கட்டளை	𑌕𑌕𑍍𑌷𑍍𑌯𑌾 வகுப்பு	𑌚𑌿𑌨𑍍𑌤𑌾 கவலை-நினைவு
𑌆𑌶𑌾 ஆசை	𑌕𑌶𑌾 சாட்டை	𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌕𑌾 நிலவு
𑌇𑌚𑍍𑌛𑌾 விருப்பம்	𑌕𑍁𑌞𑍍𑌚𑌿𑌕𑌾 திறவுகோல்	𑌛𑌾𑌯𑌾 நிழல்
𑌈𑌰𑍍𑌷𑍍𑌯𑌾 பொருமை	𑌕𑌲𑌾 கலை	𑌛𑌾𑌤𑍍𑌰𑌾 மாணவி
𑌕𑌨𑍍𑌯𑌾 சிறுபெண்	𑌕𑌥𑌾 கதை	𑌤𑍃𑌷𑍍𑌣𑌾 ஆசை
𑌭𑌾𑌰𑍍𑌯𑌾 மனைவி	𑌕𑍍𑌰𑍀𑌡𑌾 விளையாட்டு	𑌦𑍇𑌵𑌤𑌾 தேவதை
𑌕𑍃𑌤𑌜𑍍𑌞𑌤𑌾 நன்றியறிவு	𑌕𑍍𑌷𑌮𑌾 பொறுமை	𑌨𑌿𑌦𑍍𑌰𑌾 தூக்கம்

[illegible]	[illegible]	[illegible]
இரவு	மாலை	ஸ்ரத்தை
[illegible]	[illegible]	[illegible]
படகு	வீதி	கிளை
[illegible]	[illegible]	[illegible]
அறிவு	கோடு	துதிக்கை
[illegible]	[illegible]	[illegible]
பெட்டி	கொடி	ப்ரதிமை-கல்
[illegible]	[illegible]	[illegible]
கடிதம்	பெண்	படுக்கை
[illegible]	[illegible]	[illegible]
கொடி	வெட்கம்	அழகு
[illegible]	[illegible]	[illegible]
பள்ளிக்கூடம்	வேளை—ஸமுத்திரக்கரை	ஸபை
[illegible]	[illegible]	[illegible]
சிறுபெண்	கல்வி-படிப்பு	ஸீதை
[illegible]	[illegible]	[illegible]
அன்னமிடுதல்	ஸமாசாரம்	ஸேனை
[illegible]	[illegible]	[illegible]
மனைவி	துன்பம்	நாட்டுப்பெண்
[illegible]	[illegible]	[illegible]
நுண்ணறிவு	துன்பம்	இச்சை
[illegible]	[illegible]	
ஈ	ஸந்தேகம்	

பாடம்-6

இகாராந்த: ஸ்த்ரீலிங்கோ மதி ஶப்த: புத்தி

ஒருமை	இருமை	பன்மை
மதி:	மதீ	மதய:
மதிம்	மதீ	மதீ:
மத்யா	மதிப்யாம்	மதிபி:
மத்யை / மதயே	மதிப்யாம்	மதிப்ய:
மத்யா: / மதே:	மதிப்யாம்	மதிப்ய:
மத்யா: / மதே:	மத்யோ:	மதீநாம்
மத்யாம் / மதௌ	மத்யோ:	மதிஷு
ஹே மதே	ஹே மதீ	ஹே மதய:

இது போலவே கீழே கொடுக்கப்பட்டிருக்கும் 'இகாராந்த' ஸ்த்ரீலிங்கச் சொற்களை மனனம் செய்யவும்.

அங்குலி:	நதி:	கேலி:
விரல்	வணக்கம்	விளையாட்டு
அவநி:	கலி:	க்ஷிதி:
பூமி	சண்டை	பூமி
அநுரக்தி:	கீர்த்தி:	கதி:
அன்பு	புகழ்	நடை

தரி: ஓடம்	புஷ்டி: பருமன்	ருசி: சுவை
துஷ்டி: சந்தோஷம்	புத்தி: அறிவு	ராத்ரி: இரவு
த்ருஷ்டி: பார்வை	விபூதி: ஐஸ்வர்யம்	ரஜனி: இரவு
துஷ்க்ருதி: தீயசெயல்	பூமி: பூமி	விரக்தி: பற்றின்மை
ஆர்த்தி: தொல்லை	பக்தி: பக்தி	வஸதி: இருப்பிடம்
த்ருதி: தைர்யம்	பீதி: பயம்	ச்ரேணி: வரிசை
நீதி: ந்யாயம்	மூர்த்தி: உருவம்	ச்ருதி: வேதம்
ப்ரதிக்ருதி: பதில் செய்தல்	முக்தி: விடுதலை	ஸ்ருஷ்டி: படைப்பு
ப்ரக்ருதி: இயற்கை	ம்ருதி: மரணம்	ஸ்திதி: இருப்பு
ப்ரீதி: அன்பு	ரதி: மன்மதனின் மனைவி	சாந்தி: அமைதி

ஸ்துதி:-பிரார்த்தனை

பாடம்-7

ஈகாராந்த: ஸ்த்ரீலிங்கோ கௌரீ ஶப்த:

கௌரீ-பார்வதி

ஒருமை	இருமை	பன்மை
கௌரீ	கௌர்யௌ	கௌர்ய:
கௌரீம்	கௌர்யௌ	கௌரீ:
கௌர்யா	கௌரீப்யாம்	கௌரீபி:
கௌர்யை	கௌரீப்யாம்	கௌரீப்ய:
கௌர்யா:	கௌரீப்யாம்	கௌரீப்ய:
கௌர்யா:	கௌர்யோ:	கௌரீணாம்
கௌர்யாம்	கௌர்யோ:	கௌரீஷு
ஹே கௌரி	ஹே கௌர்யௌ	ஹே கௌர்ய:

இது போலவே கீழே கொடுக்கப்பட்டிருக்கும் ஈகாராந்த ஸ்த்ரீலிங்க சொற்களை மனனம் செய்யவும்.

அஜாஜீ	குமாரீ	கோபீ
ஜீரகம்	பெண், புதல்வி	இடைச்சி
அடவீ	கௌமுதீ	ஜநநீ
காடு	நிலவு	தாயார்
அவந்தீ	கைகயீ	தந்த்ரீ
அவந்தீநகரம்	கைகேயீ	கம்பி
அருந்ததீ	க்ஷேபணீ	தர்ஜநீ
அருந்ததீ	துடுப்பு	ஆள்காட்டி

𑌦𑌾𑌸𑍀	𑌪𑌞𑍍𑌚𑌵𑌟𑍀	𑌲𑍇𑌖𑌨𑍀
வேலைக்காரி	பஞ்சவடி	எழுதுகோல்
𑌦𑍇𑌵𑍀	𑌪𑍍𑌰𑌾𑌚𑍀	𑌵𑌾𑌣𑍀
பெண்தேவதை	கிழக்கு	ஸரஸ்வதீ
𑌨𑌦𑍀	𑌪𑍁𑌤𑍍𑌰𑍀	𑌵𑌾𑌪𑍀
ஆறு	பெண்-மகள்	கிணறு
𑌨𑌟𑍀	𑌪𑍁𑌤𑍍𑌰𑌵𑌤𑍀	𑌵𑌾𑌨𑌰𑍀
நர்த்தனம் செய்பவள்	புத்திரனை உடையவள்	பெண் குரங்கு
𑌨𑌾𑌰𑍀	𑌭𑌾𑌗𑍀𑌰𑌥𑍀	𑌵𑌿𑌦𑍁𑌷𑍀
பெண்	கங்கை	அறிவுள்ளவள்
𑌨𑌗𑌰𑍀	𑌮𑌹𑌿𑌷𑍀	𑌵𑍍𑌯𑌾𑌘𑍍𑌰𑍀
பட்டிணம்	ராணி	பெண் புலி
𑌪𑍃𑌥𑍍𑌵𑍀	𑌮𑍇𑌦𑌿𑌨𑍀	𑌵𑍍𑌯𑌾𑌲𑍀
பூமி	பூமி	பெண்பாம்பு
𑌪𑌤𑍍𑌨𑍀	𑌮𑌾𑌤𑍁𑌲𑌾𑌨𑍀	𑌸𑌖𑍀
மனைவி	அம்மாமி	தோழீ
𑌭𑌗𑌿𑌨𑍀	𑌰𑌾𑌜𑍍𑌞𑍀	𑌸𑍋𑌦𑌰𑍀
ஸஹோதரீ	அரசி	ஸஹோதரீ

பாடம்-8

உகாராந்த: ஸ்த்ரீலிங்கோ தேனு ஶப்த:

தேனு:—பசு

ஒருமை	இருமை	பன்மை
தேனு:	தேனூ	தேனவ:
தேனும்	தேனூ	தேனூ:
தேன்வா	தேனுப்யாம்	தேனுபி:
தேனவே / தேன்வை	தேனுப்யாம்	தேனுப்ய:
தேனோ: / தேன்வா:	தேனுப்யாம்	தேனுப்ய:
தேனோ: / தேன்வா:	தேன்வோ:	தேனூனாம்
தேனௌ / தேன்வாம்	தேன்வோ:	தேனுஷு
ஹே தேனோ	ஹே தேனூ	ஹே தேனவ:

இது போலவே கீழே கொடுக்கப்பட்டிருக்கும் 'உகாராந்த' ஸ்த்ரீலிங்கச் சொற்களை மனனம் செய்யவும்.

அப்ரமு:	சஞ்சு:	கமண்டலு:-(லூ)
தேவலோக பெண் யானை	பறவையின் அலகு	கமண்டலம்
கரூ:	கு:	தனு:
கரண்டி-கிண்டி	பூமி	சரீரம்
கரேணு:	காமதேனு:	ரஜ்ஜு:
பெண் யானை	தேவலோக பசு	கயிறு

𑌶𑌲𑌾𑌟𑍁𑌃	𑌸𑍍𑌨𑌾𑌯𑍁𑌃	𑌹𑌨𑍁𑌃
காய்கறி	நரம்பு	தாடை, கன்னம்

𑌊𑌕𑌾𑌰𑌾𑌨𑍍𑌤𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌲𑌿𑌙𑍍𑌗𑍋 𑌵𑌧𑍂 𑌶𑌬𑍍𑌦𑌃

𑌵𑌧𑍂𑌃—மணப்பெண்

ஒருமை	இருமை	பன்மை
𑌵𑌧𑍂𑌃	𑌵𑌧𑍍𑌵𑍌	𑌵𑌧𑍍𑌵𑌃
𑌵𑌧𑍂𑌂	𑌵𑌧𑍍𑌵𑍌	𑌵𑌧𑍂𑌃
𑌵𑌧𑍍𑌵𑌾	𑌵𑌧𑍂𑌭𑍍𑌯𑌾𑌂	𑌵𑌧𑍂𑌭𑌿𑌃
𑌵𑌧𑍍𑌵𑍈	𑌵𑌧𑍂𑌭𑍍𑌯𑌾𑌂	𑌵𑌧𑍂𑌭𑍍𑌯𑌃
𑌵𑌧𑍍𑌵𑌾𑌃	𑌵𑌧𑍂𑌭𑍍𑌯𑌾𑌂	𑌵𑌧𑍂𑌭𑍍𑌯𑌃
𑌵𑌧𑍍𑌵𑌾𑌃	𑌵𑌧𑍍𑌵𑍋𑌃	𑌵𑌧𑍂𑌨𑌾𑌂
𑌵𑌧𑍍𑌵𑌾𑌂	𑌵𑌧𑍍𑌵𑍋𑌃	𑌵𑌧𑍂𑌷𑍁
𑌹𑍇 𑌵𑌧𑍁	𑌹𑍇 𑌵𑌧𑍍𑌵𑍌	𑌹𑍇 𑌵𑌧𑍍𑌵𑌃

இது போலவே கீழே கொடுக்கப்பட்டிருக்கும் ஊகாராந்த ஸ்த்ரீலிங்க சொற்களை மனப்பாடம் செய்யவும்.

[illegible]	𑌕𑍁𑌤𑍂𑌃	𑌤𑌰𑍍𑌦𑍂𑌃
நரகம்	எண்ணைக் கொப்பறை	துடுப்பு
𑌕𑌚𑍂𑌃	𑌕𑌚𑍍𑌛𑍂𑌃	𑌪𑍍𑌰𑌸𑍂𑌃
சேம்பு	சொறி சிறங்கு	தாய்
𑌕𑌣𑍍𑌡𑍂𑌃	𑌕𑌰𑍍𑌕𑌨𑍍𑌧𑍂𑌃	𑌯𑌵𑌾𑌗𑍂𑌃
சொறி சிரங்கு	இலந்தை	கஞ்சி
𑌕𑌾𑌸𑍂𑌃	𑌚𑌮𑍂𑌃	𑌜𑌂𑌬𑍂𑌃
ஓர் ஆயுதம்	ஸேனை	நாவல்

பாடம்-9

𑌋𑌕𑌾𑌰𑌾𑌨𑍍𑌤𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌲𑌿𑌙𑍍𑌗𑍋 𑌮𑌾𑌤𑍃 𑌶𑌬𑍍𑌦𑌃

𑌮𑌾𑌤𑌾—தாயார்

ஒருமை	இருமை	பன்மை
𑌮𑌾𑌤𑌾	𑌮𑌾𑌤𑌰𑍌	𑌮𑌾𑌤𑌰𑌃
𑌮𑌾𑌤𑌰𑌂	𑌮𑌾𑌤𑌰𑍌	𑌮𑌾𑌤𑍄𑌃
𑌮𑌾𑌤𑍍𑌰𑌾	𑌮𑌾𑌤𑍃𑌭𑍍𑌯𑌾𑌂	𑌮𑌾𑌤𑍃𑌭𑌿𑌃
𑌮𑌾𑌤𑍍𑌰𑍇	𑌮𑌾𑌤𑍃𑌭𑍍𑌯𑌾𑌂	𑌮𑌾𑌤𑍃𑌭𑍍𑌯𑌃
𑌮𑌾𑌤𑍁𑌃	𑌮𑌾𑌤𑍃𑌭𑍍𑌯𑌾𑌂	𑌮𑌾𑌤𑍃𑌭𑍍𑌯𑌃
𑌮𑌾𑌤𑍁𑌃	𑌮𑌾𑌤𑍍𑌰𑍋𑌃	𑌮𑌾𑌤𑍄𑌣𑌾𑌂
𑌮𑌾𑌤𑌰𑌿	𑌮𑌾𑌤𑍍𑌰𑍋𑌃	𑌮𑌾𑌤𑍃𑌷𑍁
𑌹𑍇𑌮𑌾𑌤𑌃	𑌹𑍇𑌮𑌾𑌤𑌰𑍌	𑌹𑍇𑌮𑌾𑌤𑌰𑌃

இது போலவே கீழே கொடுக்கப்பட்டிருக்கும் ருகாராந்த ஸ்த்ரீலிங்கச் சொற்களை மனனம் செய்யவும்.

𑌦𑍁𑌹𑌿𑌤𑌾	𑌨𑌨𑌾𑌨𑍍𑌦𑌾	𑌯𑌾𑌤𑌾
மகள்	நாத்தனார்	ஓரகத்தி (மைத்துனனின் மனைவி)

𑌓𑌕𑌾𑌰𑌾𑌨𑍍𑌤𑌃 𑌪𑍁𑌂𑌲𑍍𑌲𑌿𑌙𑍍𑌗𑍋 (𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌲𑌿𑌙𑍍𑌗𑍋) 𑌗𑍋 𑌶𑌬𑍍𑌦𑌃

(பசு, காளை)

ஒருமை	இருமை	பன்மை
𑌗𑍌𑌃	𑌗𑌾𑌵𑍌	𑌗𑌾𑌵𑌃
𑌗𑌾𑌂	𑌗𑌾𑌵𑍌	𑌗𑌾𑌃
𑌗𑌵𑌾	𑌗𑍋𑌭𑍍𑌯𑌾𑌂	𑌗𑍋𑌭𑌿𑌃

हरये	हरिभ्याम्	हरिभ्यः
हरेः	हरिभ्याम्	हरिभ्यः
हरेः	हर्योः	हरीणाम्
हरौ	हर्योः	हरिषु
हे हरे	हे हरी	हे हरयः

பாடம்-10

अकारान्तः नपुंसकलिङ्गो ज्ञान-शब्दः

ज्ञानम् — அறிவு

ஒருமை	இருமை	பன்மை
ज्ञानम्	ज्ञाने	ज्ञानानि
ज्ञानम्	ज्ञाने	ज्ञानानि
ज्ञानेन	ज्ञानाभ्याम्	ज्ञानैः
ज्ञानाय	ज्ञानाभ्याम्	ज्ञानेभ्यः
ज्ञानात्	ज्ञानाभ्याम्	ज्ञानेभ्यः
ज्ञानस्य	ज्ञानयोः	ज्ञानानाम्
ज्ञाने	ज्ञानयोः	ज्ञानेषु
हे ज्ञान	हे ज्ञाने	हे ज्ञानानि

இது போலவே கீழே கொடுக்கப்பட்டிருக்கும் அகாராந்த நபும்ஸகலிங்கச் சொற்களை மனனம் செய்யவும்.

अन्नम्	उदरम्	उलूखलम्
சாதம்	வயிறு	உரல்
अभ्रम्	उदकम्	कमलम्
மேகம்	ஜலம்	தாமரை

காஷ்டம்
விறகு
குஸுமம்
புஷ்பம்
குட்யம்
சுவர்
க்ஷீரம்
பால்
க்ஷேத்ரம்
வயல்
கனித்ரம்
மண்வெட்டி
கோஷ்டம்
தொழுவம்
கேஹம்
வீடு
சித்ரம்
படம
சக்ரம்
சக்கரம்
தீரம்
கரை
தாத்ரம்
அறிவாள்
தர்பணம்
கண்ணாடி
நகம்
நகம்

நேத்ரம்
கண்
நயனம்
கண்
பாத்ரம்
பாண்டம்
ஜலம்
தண்ணீர்
நகரம்
பட்டிணம்
நக்ஷத்ரம்
நக்ஷத்ரம்
புலினம்
மணற்குன்று
பாபம்
பாபம்
பத்ரம்
இலை, கடிதம்
புண்யம்
புண்யம
பல்வலம்
சிறிய குளம்
ஹஸனம்
நகை
மாம்ஸம்
மாமிஸம்
மித்ரம்
நண்பன்

ஆஸ்யம்
வாய்
யூதம்
மந்தை
யந்த்ரம்
யந்திரம்
ரத்னம்
இரத்தினம்
ராஜ்யம்
ராஜ்யம்
ரஜதம்
வெள்ளி
லலாடம்
நெற்றி
வதனம்
வாய்-முகம்
ருதிரம்
இரத்தம்
கபாலம்
மண்டைஓடு
மந்திரம்
கோயில்
வ்யஜனம்
விசிறி
வஸ்த்ரம்
துணி-வேஷ்டி
வனம்
காடு

ஶரீரம் தேஹம்	ஶாஸ்த்ரம் சாஸ்திரம்—கலை	ஸீஸம் ஈயம்
ஶீர்ஷம் தலை	ஸிம்ஹாஸநம் சிங்காதனம்	ஸத்யம் ஸத்யம்
ஶ்ரோத்ரம் காது	ஶுல்கம் சுங்கம்	ஸுகம் சுகம்
ஶஸ்த்ரம் ஆயுதம்	ஸலிலம் ஜலம்	ஹ்ருதயம் இருதயம்

பாடம்-11

தகாராந்த: பும்லிங்க: இதம் ஶப்த: இவன்

ஒருமை	இருமை	பன்மை
அயம்	இமௌ	இமே
இமம் ஏநம் }	இமௌ ஏநௌ }	இமாந் ஏநாந் }
அநேந ஏநேந }	ஆப்யாம்	ஏபி:
அஸ்மை	ஆப்யாம்	ஏப்ய:
அஸ்மாத்	ஆப்யாம்	ஏப்ய:
அஸ்ய	அநயோ: ஏநயோ: }	ஏஷாம்
அஸ்மின்	அநயோ: ஏநயோ: }	ஏஷு

𑌮𑌕𑌾𑌰𑌾𑌨𑍍𑌤𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌲𑌿𑌙𑍍𑌗𑌃 𑌇𑌦𑌂 𑌶𑌬𑍍𑌦𑌃 இவள்

ஒருமை	இருமை	பன்மை
𑌇𑌯𑌂	𑌇𑌮𑍇	𑌇𑌮𑌾𑌃
𑌇𑌮𑌾𑌂 𑌏𑌨𑌾𑌂	𑌇𑌮𑍇 𑌏𑌨𑍇	𑌇𑌮𑌾𑌃 𑌏𑌨𑌾𑌃
𑌅𑌨𑌯𑌾 𑌏𑌨𑌯𑌾	𑌆𑌭𑍍𑌯𑌾𑌂	𑌆𑌭𑌿𑌃
𑌅𑌸𑍍𑌯𑍈	𑌆𑌭𑍍𑌯𑌾𑌂	𑌆𑌭𑍍𑌯𑌃
𑌅𑌸𑍍𑌯𑌾𑌃	𑌆𑌭𑍍𑌯𑌾𑌂	𑌆𑌭𑍍𑌯𑌃
𑌅𑌸𑍍𑌯𑌾𑌃	𑌅𑌨𑌯𑍋𑌃 𑌏𑌨𑌯𑍋𑌃	𑌆𑌸𑌾𑌮𑍍
𑌅𑌸𑍍𑌯𑌾𑌂	𑌅𑌨𑌯𑍋𑌃 𑌏𑌨𑌯𑍋𑌃	𑌆𑌸𑍁

𑌮𑌕𑌾𑌰𑌾𑌨𑍍𑌤𑌃 𑌨𑌪𑍁𑌂𑌸𑌕𑌲𑌿𑌙𑍍𑌗𑌃 𑌇𑌦𑌂 𑌶𑌬𑍍𑌦𑌃 இது

ஒருமை	இருமை	பன்மை
𑌇𑌦𑌂	𑌇𑌮𑍇	𑌇𑌮𑌾𑌨𑌿
𑌇𑌦𑌂 𑌏𑌨𑌤𑍍	𑌇𑌮𑍇 𑌏𑌨𑍇	𑌇𑌮𑌾𑌨𑌿 𑌏𑌨𑌾𑌨𑌿

𑌶𑍇𑌷𑌂 𑌪𑍁𑌂𑌵𑌤𑍍

ஸகாராந்த: பும்லிங்க: அதஸ் ஶப்த:
அவன், அந்த

ஒருமை	இருமை	பன்மை
அஸௌ	அமூ	அமீ
அமும்	அமூ	அமூந்
அமுநா	அமூப்யாம்	அமீபி:
அமுஷ்மை	அமூப்யாம்	அமீப்ய:
அமுஷ்மாத்	அமூப்யாம்	அமீப்ய:
அமுஷ்ய	அமுயோ:	அமீஷாம்
அமுஷ்மிந்	அமுயோ:	அமீஷு

ஸகாராந்த: ஸ்த்ரீலிங்க: அதஸ் ஶப்த:
அவள், அந்த

ஒருமை	இருமை	பன்மை
அஸௌ	அமூ	அமூ:
அமூம்	அமூ	அமூ:
அமுயா	அமூப்யாம்	அமூபி:
அமுஷ்யை	அமூப்யாம்	அமூப்ய:
அமுஷ்யா:	அமூப்யாம்	அமூப்ய:
அமுஷ்யா:	அமுயோ:	அமூஷாம்
அமுஷ்யாம்	அமுயோ:	அமூஷு

ஸகாராந்த: நபும்ஸகலிங்க: அதஸ் ஶப்த:

அந்த

ஒருமை	இருமை	பன்மை
அத:	அமூ	அமூநி
அத:	அமூ	அமூநி

ஶேஷம் பும்வத்

பாடம்-12

தகாராந்த: பும்லிங்க: அஸ்மத் ஶப்த:

அஹம்-நான்.

ஒருமை	இருமை	பன்மை
அஹம்	ஆவாம்	வயம்
மாம் / மா	ஆவாம் / நௌ	அஸ்மாந் / ந:
மயா	ஆவாப்யாம்	அஸ்மாபி:
மஹ்யம் / மே	ஆவாப்யாம் / நௌ	அஸ்மப்யம் / ந:
மத்	ஆவாப்யாம்	அஸ்மத்
மம / மே	ஆவயோ: / நௌ	அஸ்மாகம் / ந:
மயி	ஆவயோ:	அஸ்மாஸு

தகாராந்த: பும்லிங்க: யுஷ்மச்சப்த: நீ.

ஒருமை	இருமை	பன்மை
த்வம்	யுவாம்	யூயம்
த்வாம் த்வா	யுவாம் வாம்	யுஷ்மான் வ:
த்வயா	யுவாப்யாம்	யுஷ்மாபி:
துப்யம் தே	யுவாப்யாம் வாம்	யுஷ்மப்யம் வ:
த்வத்	யுவாப்யாம்	யுஷ்மத்
தவ தே	யுவயோ: வாம்	யுஷ்மாகம் வ:
த்வயி	யுவயோ:	யுஷ்மாஸு

தகாராந்த: பும்லிங்க: ஏதச்சப்த: இவன்

ஒருமை	இருமை	பன்மை
ஏஷ:	ஏதௌ	ஏதே
ஏதம் ஏனம்	ஏதௌ ஏனௌ	ஏதான் ஏனான்
ஏதேன ஏனேன	ஏதாப்யாம்	ஏதை:
ஏதஸ்மை	ஏதாப்யாம்	ஏதேப்ய:
ஏதஸ்மாத்	ஏதாப்யாம்	ஏதேப்ய:

𑌧𑌾𑌤𑍁𑌃	𑌧𑌾𑌤𑍍𑌰𑍋𑌃 𑌧𑌾𑌤𑍍𑌰𑍋𑌃	𑌧𑌾𑌤𑍄𑌣𑌾𑌂
𑌧𑌾𑌤𑌰𑌿	𑌧𑌾𑌤𑍍𑌰𑍋𑌃 𑌧𑌾𑌤𑍍𑌰𑍋𑌃	𑌧𑌾𑌤𑍃𑌷𑍁

𑌋𑌕𑌾𑌰𑌾𑌨𑍍𑌤𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌲𑌿𑌙𑍍𑌗𑌃 𑌧𑌾𑌤𑍃 𑌶𑌬𑍍𑌦𑌃 இவள்

ஒருமை	இருமை	பன்மை
𑌧𑌾𑌤𑌾	𑌧𑌾𑌤𑌾𑌰𑍌	𑌧𑌾𑌤𑌾𑌰𑌃
𑌧𑌾𑌤𑌾𑌰𑌂 𑌧𑌾𑌤𑌾𑌰𑌂	𑌧𑌾𑌤𑌾𑌰𑍌 𑌧𑌾𑌤𑌾𑌰𑍌	𑌧𑌾𑌤𑍄𑌃 𑌧𑌾𑌤𑍄𑌃
𑌧𑌾𑌤𑍍𑌰𑌾 𑌧𑌾𑌤𑍍𑌰𑌾	𑌧𑌾𑌤𑍃𑌭𑍍𑌯𑌾𑌂	𑌧𑌾𑌤𑍃𑌭𑌿𑌃
𑌧𑌾𑌤𑍍𑌰𑍇	𑌧𑌾𑌤𑍃𑌭𑍍𑌯𑌾𑌂	𑌧𑌾𑌤𑍃𑌭𑍍𑌯𑌃
𑌧𑌾𑌤𑍁𑌃	𑌧𑌾𑌤𑍃𑌭𑍍𑌯𑌾𑌂	𑌧𑌾𑌤𑍃𑌭𑍍𑌯𑌃
𑌧𑌾𑌤𑍁𑌃	𑌧𑌾𑌤𑍍𑌰𑍋𑌃 𑌧𑌾𑌤𑍍𑌰𑍋𑌃	𑌧𑌾𑌤𑍄𑌣𑌾𑌂
𑌧𑌾𑌤𑌰𑌿	𑌧𑌾𑌤𑍍𑌰𑍋𑌃 𑌧𑌾𑌤𑍍𑌰𑍋𑌃	𑌧𑌾𑌤𑍃𑌷𑍁

𑌋𑌕𑌾𑌰𑌾𑌨𑍍𑌤𑌃 𑌨𑌪𑍁𑌂𑌸𑌕𑌲𑌿𑌙𑍍𑌗𑌃 𑌧𑌾𑌤𑍃 𑌶𑌬𑍍𑌦𑌃 இது

𑌧𑌾𑌤𑍃	𑌧𑌾𑌤𑍃𑌣𑍀	𑌧𑌾𑌤𑍄𑌣𑌿
𑌧𑌾𑌤𑍃 𑌧𑌾𑌤𑍃	𑌧𑌾𑌤𑍃𑌣𑍀 𑌧𑌾𑌤𑍃𑌣𑍀	𑌧𑌾𑌤𑍄𑌣𑌿 𑌧𑌾𑌤𑍄𑌣𑌿

𑌶𑍇𑌷𑌂 𑌪𑍁𑌂𑌵𑌤𑍍

தகாராந்த: பும்லிங்க: தச்ஶப்த: அவன்

ஸ:	தௌ	தே
தம்	தௌ	தாந்
தேந	தாப்யாம்	தை:
தஸ்மை	தாப்யாம்	தேப்ய:
தஸ்மாத்	தாப்யாம்	தேப்ய:
தஸ்ய	தயோ:	தேஷாம்
தஸ்மிந்	தயோ:	தேஷு

தகாராந்த: ஸ்த்ரீலிங்க: தச்ஶப்த: அவள்

ஸா	தே	தா:
தாம்	தே	தா:
தயா	தாப்யாம்	தாபி:
தஸ்யை	தாப்யாம்	தாப்ய:
தஸ்யா:	தாப்யாம்	தாப்ய:
தஸ்யா:	தயோ:	தாஸாம்
தஸ்யாம்	தயோ:	தாஸு

தகாராந்த: நபும்ஸகலிங்க: தச்ஶப்த: அது

தத்	தே	தாநி
தத்	தே	தாநி

ஶேஷம் பும்வத்

பாடம்-13

க்ரியாபதங்கள்

க்ரியாபதங்களுக்கு அடிப்படையாக உள்ளவை க்ரியா மூலபதங்கள் நஶ் வஹ் க்ரீஞ் வத் போன்றவைகள். இவைகள் பத்து கணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் 1, 4, 6, 10வது கணங்கள் ஒருவிதமாகவும்; 2, 3, 5, 7, 8, 9வது கணங்கள் வேறுவிதமாகவும் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாம் மூன்றும் கணங்கள் நீங்கலாக மற்ற கணங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி 'விகரணம்' உண்டு. முதலில் மூலபதங்களுடன் விகரணத்தை சேர்த்து அதற்குப்பிறகு படர்க்கை, முன்னிலை, தன்மைகளைக் குறிப்பிடும் விகுதியை இறுதியில் சேர்க்கவேண்டும். வினைச்சொற்களுக்கு லிங்க வேற்றுமை உருபுகள் தனித்தனியாகக் கிடையாது.

உதாஹரணம்:—

ஒருமை.

மூலபதம்		விகரணம்		நிகழ்கால பரஸ்மைபத ஒருமை விகுதி		மொத்த க்ரியாபதம்.
(பூ) பூ	+	அ	+	தி	=	பவதி ‖

பவதி என்ற க்ரியாபதம் ஆண், பெண், அலி என்ற மூன்று இனங்களிலும் சந்தர்ப்பத்திற்கு தக்கபடி எதையேனும் ஒன்றைக் குறிப்பிடும்.

நம் + அ + தி = நமதி வணங்குகிறான்-ள்-து.

நம் + அ + ஸி = நமஸி வணங்குகிறாய் (ஆண் - பெண் - அலி மூன்றில் ஒன்றைக் குறிக்கும்.

நம் + அ + மி = நமாமி வணங்குகிறேன். ஷ

தன்மையில் விகரணம் 'அ' — ஆவாக தீர்க்கமாகும்.

இருமை

நம் + அ + த: = நமத: இருவர் வணங்குகின்றனர்.

நம் + அ + த²: = நமத²: இருவர் வணங்குகின்றீர்கள்.

நம் + அ + வ: = நமாவ: இருவர் வணங்குகின்றோம்.

பன்மை

நம்+அ+அ(ந்தி)=நமந்தி பலர் வணங்குகின்றனர்.

நம் + அ + த = நமத பலர் வணங்குகின்றீர்கள்.

நம் + அ + ம: = நமாம: பலர் வணங்குகின்றோம்.

இதுபோலவே மற்ற முதற்கண பரஸ்மைபத க்ரியாபதங்களின் அர்த்தங்களை யறிந்துகொள்ளவும்

ஆத்மனேபதம்

உதாஹரணம்:—

ஒருமை.

மூலபதம்		விகரணம்		நிகழ்கால ஆத்மனேபத ஒருமை விகுதி		மொத்த க்ரியாபதம்.
வந்த்	+	அ	+	தே	=	வந்த³தே

வந்தே - வணங்குகிறான் - மூன்று லிங்கத்திலும் ஏதாவதொன்றை சந்தர்ப்பத்திற்குத் தகுந்தபடி எதையேனும் ஒன்றைக் குறிப்பிடும்.

படர்க்கை வந்³+அ+தே=வந்ததே வணங்குகிறான்

முன்னிலை வந்³+அ+ஸே=வந்ததே³ வணங்குகிறாய்

தன்மை வந்³+அ+இ = வந்தே வணங்குகிறேன்

இருமை

(ப) வந்³+அ+இதே=வந்தேதே இருவர் வணங்குகிறார்கள்

(மு) வந்³+அ+இதே²=வந்தேதே² இருவர்வணங்குகிறீர்கள்

(த) வந்³+அ+வஹே=வந்தாவஹே இருவர்வணங்குகிறோம்

பன்மை

(ப) வந்³+அ+(அ)ந்தே-வந்தந்தே பலர் வணங்குகிறார்கள்

(மு) வந்³+அ+த்⁴வே=வந்தத்⁴வே பலர் வணங்குகிறீர்கள்

(த) வந்³+அ+மஹே-வந்தாமஹே பலர் வணங்குகிறோம்

இதுபோலவே மற்ற முதற்கண ஆத்மனேபத க்ரியா பதங்களின் அர்த்தங்களை அறிந்து கொள்ளவும்.

பாடம்-14

प्रथमा विभक्तिः (कर्तृकारकम्)

க்ரியா பதங்கள் எழுவாயை அனுஸரித்துவரும்

अर्चामि	खादति	जल्पति
பூஜிக்கிறேன்	சாப்பிடுகிறான்	உளருகிறான்
काङ्क्षति	गच्छति	नमति
விரும்புகிறான்	செல்கிறான்	வணங்குகிறான்
अटसि	गायति	वदति
சுற்றுகிறாய்	பாடுகிறான்	சொல்கிறான்
कूजति	जीवति	धरति
கூவுகின்றது	உயிரோடிருக்கிறான்	தாங்குகிறான்
क्रीडति	चरति	विकसति
விளையாடுகிறான்	மேய்கிறது	மலர்கிறது

अहं अर्चामि । आवां अर्चावः । वयं अर्चामः ॥ त्वं अटसि । युवां अटथः । यूयं अटथ । कोकिलः कूजति । कोकिलौ कूजतः । कोकिलाः कूजन्ति ॥ बालः क्रीडति । बालौ क्रीडतः । बालाः क्रीडन्ति ॥ कविः वदति । कवी वदतः । कवयः वदन्ति ॥ हंसः काङ्क्षति । हंसौ काङ्क्षतः । हंसाः काङ्क्षन्ति ॥ पिता खादति । पितरौ खादतः । पितरः

வஹந்தி ॥ ரமா கச்சதி । ரமே கச்சத: । ரமா: கச்சந்தி ॥ முனி: யாதி । முனீ யாத: । முனய: யாந்தி ॥ தேனு: தாவதி । தேனூ தாவத: । தேனவ: தாவந்தி ॥ கௌ: சரதி । காவௌ சரத: । காவ: சரந்தி ॥ பிக: காயதி । பிகௌ காயத: । பிகா: காயந்தி ॥ மாதா ஜீவதி । மாதரௌ ஜீவத: । மாதர: ஜீவந்தி ॥ நநாந்தா ஜல்பதி । நநாந்தரௌ ஜல்பத: । நநாந்தர: ஜல்பந்தி ॥ கமலம் விகஸதி । கமலே விகஸத: । கமலானி விகஸந்தி ॥

பாடம்-15

த்விதீயா விபக்தி:—(கர்மகாரகம்)

தராமி கடந்து செல்கிறேன்	பஶ்யதி பார்க்கின்றான்	விதரதி கொடுக்கின்றது
த்யஜஸி விட்டுவிடுகிறாய்	வ்ரஜதி செல்கிறான்	படதி படிக்கின்றான்
தசதி கடிக்கின்றது	மார்கயதே தேடுகின்றான்	பவதி உண்டாகிறது
பிபதி குடிக்கின்றான்	யச்சதி கொடுக்கின்றான்	அஸ்தி இருக்கின்றது

அஹம் நதீம் தராமி | ஆவாம் நதீம் தராவ: | வயம் நதீம் தராம: || த்வம் யஜ்ஞம் த்யஜஸி | யுவாம் யஜ்ஞம் த்யஜத: | யூயம் யஜ்ஞம் த்யஜத || ந்ருபதி: க்ஷீரம் பிபதி | ந்ருபதீ க்ஷீரம் பிபத: | ந்ருபதய: க்ஷீரம் பிபந்தி || ஓது: ஆகும் பஶ்யதி | ஓதூ ஆகும் பஶ்யத: | ஓதவ: ஆகும் பஶ்யந்தி || ஜ்யேஷ்டப்ராதா வனம் வ்ரஜதி | ஜ்யேஷ்டப்ராதரௌ வனம் வ்ரஜத: | ஜ்யேஷ்டப்ராதர: வனம் வ்ரஜந்தி || கந்யா பூஷணம் தாரயதே | கந்யே பூஷணே தாரயேதே | கந்யா: பூஷணானி தாரயந்தே || தேவீ வரம் யச்சதி | தேவ்யௌ வரம் யச்சத: | தேவ்ய: வரம் யச்சந்தி || தேநு: க்ஷீரம் விதரதி | தேநூ க்ஷீரம் விதரத: | தேநவ: க்ஷீரம் விதரந்தி || துஹிதா வேதமந்த்ரம் படதி | துஹிதரௌ வேதமந்த்ரே படத: | துஹிதர: வேதமந்த்ராணி படந்தி || க்ஷீரம் மதுரம் பவதி | க்ஷீரே மதுரே பவத: | க்ஷீராணி மதுராணி பவந்தி || ஶஸ்த்ரம் தீக்ஷ்ணம் பவதி | ஶஸ்த்ரே தீக்ஷ்ணே பவத: | ஶஸ்த்ராணி தீக்ஷ்ணானி பவந்தி ||

பாடம்-16

𑌤𑍃𑌤𑍀𑌯𑌾 𑌵𑌿𑌭𑌕𑍍𑌤𑌿𑌃 (𑌕𑌰𑌣𑌕𑌾𑌰𑌕𑌂)

𑌯𑌾𑌮𑌿 செல்கிறேன்	𑌶𑍍𑌵𑌸𑌿𑌤𑌿 மூச்சுவிடுகிறது	𑌸𑍃𑌜𑌤𑌿 படைக்கிறான்
𑌖𑌨𑌸𑌿 தோண்டுகிறாய்	𑌕𑍍𑌷𑍁𑌭𑍍𑌯𑌤𑌿 கலங்குகிறது	𑌤𑌾𑌡𑌯𑌤𑌿 அடிக்கின்றான்
𑌪𑍍𑌰𑌹𑌰𑌤𑌿 அடிக்கின்றான்	𑌶𑍃𑌣𑍋𑌤𑌿 கேட்கிறான்	𑌕𑍃𑌷𑌤𑌿 உழுகின்றான்
𑌪𑍀𑌡𑌯𑌤𑌿 துன்புறுத்துகிறான்	𑌲𑌿𑌖𑌤𑌿 எழுதுகிறான்	𑌭𑌾𑌤𑌿 விளங்குகிறது

𑌅𑌹𑌂 𑌶𑌕𑌟𑍇𑌨 𑌗𑍍𑌰𑌾𑌮𑌂 𑌯𑌾𑌮𑌿 । 𑌤𑍍𑌵𑌂 𑌖𑌨𑌿𑌤𑍍𑌰𑍇𑌣 𑌭𑍂𑌮𑌿𑌂 𑌖𑌨𑌸𑌿 । 𑌰𑌾𑌮𑌃 𑌶𑌰𑍇𑌣 𑌰𑌾𑌵𑌣𑌂 𑌪𑍍𑌰𑌹𑌰𑌤𑌿 । 𑌹𑌰𑌿𑌃 𑌦𑌣𑍍𑌡𑍇𑌨 𑌶𑌤𑍍𑌰𑍁𑌂 𑌪𑍀𑌡𑌯𑌤𑌿 । 𑌜𑌨𑌃 𑌨𑌾𑌸𑌿𑌕𑌯𑌾 𑌶𑍍𑌵𑌸𑌿𑌤𑌿। 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌃 𑌵𑌾𑌤𑍇𑌨 𑌕𑍍𑌷𑍁𑌭𑍍𑌯𑌤𑌿। 𑌶𑌿𑌷𑍍𑌯𑌃 𑌕𑌰𑍍𑌣𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌶𑍃𑌣𑍋𑌤𑌿 । 𑌧𑌾𑌤𑌾 𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑍇𑌨 𑌲𑍋𑌕𑌂 𑌸𑍃𑌜𑌤𑌿। 𑌛𑌾𑌤𑍍𑌰𑌃 𑌲𑍇𑌖𑌨𑍍𑌯𑌾 𑌲𑌿𑌖𑌤𑌿। 𑌚𑍋𑌰𑌃 𑌦𑌣𑍍𑌡𑍇𑌨 𑌬𑌾𑌲𑌂 𑌤𑌾𑌡𑌯𑌤𑌿। 𑌕𑍃𑌷𑌿𑌕𑌃 𑌹𑌲𑍇𑌨 𑌭𑍂𑌮𑌿𑌂 𑌕𑍃𑌷𑌤𑌿 । 𑌰𑌤𑍍𑌨𑌂 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍇𑌨 𑌭𑌾𑌤𑌿 ॥

அத சதுர்த்தீ விபக்தி: (ஸம்ப்ரதாநகாரகம்)

ஆநயாமி	போதயதி	யாசதே
கொண்டு வருகிறேன்	அறிவிக்கிறான்	வேண்டுகிறான்
ஶோசஸி	க்ருத்யதி	ப்ரார்த்தயதி
வருந்துகிறாய்	கோபிக்கிறான்	வேண்டுகிறான்
பூஜயதி	குப்யதி	வாஞ்சதி
பூஜிக்கின்றான்	கோபிக்கிறான்	விரும்புகிறான்
யததே	க்ரீணாதி	ஸ்தாபயதி
முயற்சிக்கிறான்	வாங்குகிறான்	நிர்மாணிக்கிறான்

அஹம் மித்ராய ஹஸ்தம் ஆநயாமி। த்வம் விநஷ்டகாய வ்ருதா ஶோசஸி। பக்த: ஜ்ஞாநாய தேவம் பூஜயதி। சாத்ரா: பாரிதோஷிகாய யததே॥ குரு: ஶிஷ்யாய பாடம் போதயதி। பிதா புத்ராய க்ருத்யதி। யஜமாந: ப்ருத்யாய குப்யதி। ஸீதா பாலகாய மோதகம் க்ரீணாதி॥ நாரீ ஸந்தாய ஆஹாரம் யாசதே। மாதா க்ஷேமாய ஸந்தாநம் ப்ரார்த்தயதி। காகா உஷ்ணாய ஹஸ்தம் வாஞ்சதி। யதிக: பாந்தாய ரூபா: ஸ்தாபயதி॥

பாடம்-17

வர்த்தமான லகார: (ப்ரத²மபுருஷ:)

உத்திஷ்ட²தி எழுந்திருக்கிறார்	க³ச்ச²தி போகின்றது	க்³ருஹ்ணாதி பிடித்துக் கொள்கிறான்
நிர்க³ச்ச²தி வெளியே செல்கிறான்	கரோதி செய்கின்றது	ப்ரவஹதி பெருகுகிறது
பி³பே⁴தி பயப்படுகிறான்	ட³யதே பறக்கின்றது	ஸரதி நழுவுகிறது
அவதராமி கீழே இறங்குகிறேன்	பதந்தி விழுகின்றன	அபஸர்பதி அப்பால் நகருகிறது

ஆசார்ய: வர்கா³த் உத்திஷ்ட²தி । ஸீதா உடஜாத் ப³ஹி: நிர்க³ச்ச²தி । ஹரிண: ஸிம்ஹாத் பி³பே⁴தி । அஹம் ஸோபானாத் அவதராமி । [illegible] ஶாகா²யா: ஶாகா²ம் க³ச்ச²தி । ஹம்ஸ: தீராத் நீரம் ப்ரவேஶம் கரோதி । காக: வ்ருக்ஷாத் ஆகாஶே ட³யதே । வ்ருக்ஷாத் பர்ணானி பதந்தி । ப³க: ஸாகராத் மத்ஸ்யான் க்³ருஹ்ணாதி । நதீ³ கி³ரே: ப்ரவஹதி । பி³ந்து³: பாத்ராத் ஸரதி । ஸர்ப: பி³லாத் அபஸர்பதி ।

ஷஷ்டீ விபக்தி:-(ஸம்பந்த:)

ஆகர்ஷதி	லம்பந்தே	வபதி
இழுக்கின்றான்	தொங்குகின்றன	விதைக்கின்றான்
அநுஸரதி	க்வணதி	லபதே
பின்பற்றுகிறான்	சப்திக்கின்றது	அடைகிறான்
வஸதி	நிஷீததி	தர்ஶயதி
வஸிக்கிறான்	உட்காருகிறான்	காண்பிக்கிறான்
ரோஹந்தி	அபிலஷதி	ஆரோஹதி
வளர்கின்றன	விரும்புகிறான்	ஏறுகிறான்

ராம: ஜநாநாம் சித்தம் ஆகர்ஷதி। பத்நீ பத்யு: ஆஜ்ஞாம் அநுஸரதி। ஆலயஸ்ய ஸமீபே அர்சக: வஸதி। ஶாலாயா: பார்ஶ்வயோ: தரவ: ரோஹந்தி। வாநரா: தரோ: ஶாகாயாம் லம்பந்தே। கண்டாயா: நதிவாரம் க்வணதி। பாந்தா: வ்ருக்ஷஸ்ய சாயாயாம் நிஷீதந்தி। புத்ரா: பிது: ஆஶீர்வாதம் அபிலஷந்தி। கர்ஷகஸ்ய புத்ர: க்ஷேத்ரே ஸஸ்யாநாம் வபதி। ராமஸ்ய ப்ராதா யஶ: லபதே॥ ஸிம்ஹஶிஶவ: கஜஸ்ய ப்ருஷ்டம் ஆரோஹந்தி॥ பாரதஸ்ய ஆசார்யா: ஸந்மார்கம் தர்ஶயந்தி॥

பாடம்-18

𑌸𑌪𑍍𑌤𑌮𑍀 𑌵𑌿𑌭𑌕𑍍𑌤𑌿𑌃-(𑌅𑌧𑌿𑌕𑌰𑌣𑌕𑌾𑌰𑌕𑌂)

𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌗𑌚𑍍𑌛𑌤𑌿	𑌵𑌿𑌹𑌰𑌤𑌿	𑌨𑌾𑌶𑌯𑌤𑌿
திரும்பிவருகிறது	விளையாடுகிறான்	கொல்கிறது
𑌸𑍍𑌖𑌲𑌤𑌿	𑌵𑌿𑌰𑌾𑌜𑌤𑍇	𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌤𑍇
தவறுகிறான்	விளங்குகிறான்	பிரகாசிக்கிறது
𑌹𑌨𑍍𑌤𑌿	𑌸𑌂𑌲𑌪𑌤𑌿	𑌵𑌿𑌕𑌿𑌰𑌤𑌿
கொல்கிறான்	பேசுகிறான்	வாரியிறைக்கின்றது
𑌲𑍁𑌠𑌤𑌿	𑌪𑍍𑌰𑌸𑌰𑌤𑌿	𑌕𑍍𑌷𑌾𑌲𑌯𑌤𑌿
புரள்கிறது	பரவுகிறது	அலம்புகிறான்

𑌵𑌿𑌹𑌗𑌃 𑌸𑌾𑌯𑌂𑌕𑌾𑌲𑍇 𑌨𑍀𑌡𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 ॥ 𑌗𑌣𑌕𑌃 𑌗𑌣𑌿𑌤𑌕𑌾𑌰𑍍𑌯𑍇 𑌸𑍍𑌖𑌲𑌤𑌿 । 𑌵𑍍𑌯𑌾𑌧𑌃 𑌮𑍃𑌗𑌾𑌨𑍍 𑌵𑌨𑍇 𑌹𑌨𑍍𑌤𑌿 । 𑌶𑌿𑌶𑍁𑌃 𑌪𑌙𑍍𑌕𑍇 𑌲𑍁𑌠𑌤𑌿 । 𑌨𑌾𑌵𑌿𑌕𑌃 𑌨𑌦𑍍𑌯𑌾𑌂 𑌵𑌿𑌹𑌰𑌤𑌿 । 𑌮𑌹𑌿𑌷𑍀 𑌸𑌿𑌂𑌹𑌾𑌸𑌨𑍇 𑌵𑌿𑌰𑌾𑌜𑌤𑍇 । 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍀 𑌸𑌭𑌾𑌯𑌾𑌂 𑌸𑌂𑌲𑌪𑌤𑌿 । 𑌰𑌾𑌜𑍍𑌞𑌃 𑌯𑌶𑌃 𑌲𑍋𑌕𑍇 𑌪𑍍𑌰𑌸𑌰𑌤𑌿 । 𑌵𑍍𑌯𑌾𑌘𑍍𑌰𑍀 𑌕𑌾𑌨𑌨𑍇 𑌮𑍃𑌗𑌾𑌨𑍍 𑌨𑌾𑌶𑌯𑌤𑌿 । 𑌕𑍃𑌷𑌕𑌃 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍇 𑌧𑌾𑌨𑍍𑌯𑌾𑌨𑌿 𑌵𑌿𑌕𑌿𑌰𑌤𑌿 ॥ 𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌂 𑌆𑌕𑌾𑌶𑍇 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌤𑍇 । 𑌦𑌾𑌸𑍀 𑌤𑌟𑌾𑌕𑍇 𑌪𑌾𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌕𑍍𑌷𑌾𑌲𑌯𑌤𑌿 ॥

ஸம்போ³த⁴நப்ரத²மா

ஹே ராம த்வம் பாட²ம் ப்ரதிதி³நம் பட² | ஹே பா³லா: யூயம் ஸதா³ ஸத்யம் வதத | ஹே ஸீதே த்வம் [illegible] குரு | [illegible] த்வம் [illegible] | ஸதா³ ஸ்வச்ச²ம் ஜலம் பிப³ | சா²த்ரா: யூயம் ஸுக²ம் ஜீவத | பா³லா: யூயம் ஸாயம் க்ரீட³த | ஹே [illegible] த்வம் [illegible] ||

பாடம்-19

க்ரியாபதா³நி

பூ⁴தகால: [லங்] இறந்த காலம்,

ப⁴விஷ்யத்கால: [ல்ருட்] எதிர்காலம்;

[லோட்] கட்டளை, [லிங்] பிரார்த்தனை, விருப்பம்.

இவைகளை அறிந்துகொள்வதற்காக சில தாதுக்களுடன் அதன் விகரண ப்ரத்யயம் சேர்ந்த பதங்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை மாணவர்கள் நன்கு மனனம் செய்யவும்.

பரஸ்மை பதம்

அநத்³யதநபூ⁴தகால: (லங்) ப்ரத்யயா:

	ஒருமை	இருமை	பன்மை
படர்க்கை	த்	தாம்	அந்
முன்னிலை	ஸ்	தம்	த
தன்மை	அம்	வ	ம

ගම් - ගච්ඡ செல்

ஒருமை	இருமை	பன்மை
අගච්ඡත් சென்றான்	අගච්ඡතාම්	අගච්ඡන්
අගච්ඡඃ சென்றாய்	අගච්ඡතම්	අගච්ඡත
අගච්ඡම් சென்றேன்	අගච්ඡාව	අගච්ඡාම

භූ - භව இரு

අභවත් இருந்தான்	අභවතාම්	අභවන්
අභවඃ இருந்தாய்	අභවතම්	අභවත
අභවම් இருந்தேன்	අභවාව	අභවාම

වහ—சும

අවහත් சுமந்தான்	අවහතාම්	අවහන්
අවහඃ சுமந்தாய்	අවහතම්	අවහත
අවහම් சுமந்தேன்	අවහාව	අවහාම

𑌯𑌜𑍍 பூஜி

ஒருமை	இருமை	பன்மை
𑌇𑌯𑌾𑌜	𑌈𑌜𑌤𑍁𑌃	𑌈𑌜𑍁𑌃
பூஜித்தான்		
𑌇𑌯𑌜𑌿𑌥	𑌈𑌜𑌥𑍁𑌃	𑌈𑌜
பூஜித்தாய்		
𑌇𑌯𑌜	𑌈𑌜𑌿𑌵	𑌈𑌜𑌿𑌮
பூஜித்தேன்		

பாடம்-20

பரஸ்மை பதம்

𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑍍𑌕𑌾𑌲𑌃 (𑌲𑍢𑌟𑍍) 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌾𑌃

படர்க்கை	𑌸𑍍𑌯𑌤𑌿	𑌸𑍍𑌯𑌤:	𑌸𑍍𑌯𑌨𑍍𑌤𑌿
முன்னிலை	𑌸𑍍𑌯𑌸𑌿	𑌸𑍍𑌯𑌥:	𑌸𑍍𑌯𑌥
தன்மை	𑌸𑍍𑌯𑌾𑌮𑌿	𑌸𑍍𑌯𑌾𑌵:	𑌸𑍍𑌯𑌾𑌮:

𑌗𑌮𑍍𑌌 – செல்

𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑌿	𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑌃	𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿
செல்வான்		
𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌸𑌿	𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌥𑌃	𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌥
செல்வாய்		
𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿	𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌾𑌵𑌃	𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌃
செல்வேன்		

𑌭𑍂 - ஆகு

	ஒருமை	இருமை	பன்மை
	𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ஆவான்	𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌃	𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿
	𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌸𑌿 ஆவாய்	𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌥𑌃	𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌥
	𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 ஆவேன்	𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌾𑌵𑌃	𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌃

𑌵𑌹𑍍 - சும

	𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿 சுமப்பான்	𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌃	𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿
	𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑌿 சுமப்பாய்	𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌥𑌃	𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌥
	𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 சுமப்பேன்	𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌵𑌃	𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌃

𑌯𑌜𑍍 - பூஜி

	𑌯𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿 பூஜிப்பான்	𑌯𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌃	𑌯𑌕𑍍𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿
	𑌯𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑌿 பூஜிப்பாய்	𑌯𑌕𑍍𑌷𑍍𑌯𑌥𑌃	𑌯𑌕𑍍𑌷𑍍𑌯𑌥
	𑌯𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 பூஜிப்பேன்	𑌯𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌵𑌃	𑌯𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌃

𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑍍𑌕𑌾𑌲𑌃 (𑌲𑍃𑌟𑍍) கட்டளை 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌃

படர்க்கை	𑌤𑌿	𑌤𑌃	𑌨𑍍𑌤𑌿
முன்னிலை	—	𑌥𑌃	𑌥
தன்மை	𑌾𑌮𑌿	𑌾𑌵𑌃	𑌾𑌮𑌃

𑌗𑌮𑍍 - 𑌗𑌚𑍍𑌛 செல்

ஒருமை	இருமை	பன்மை
𑌗𑌚𑍍𑌛𑌤𑍁	𑌗𑌚𑍍𑌛𑌤𑌾𑌮𑍍	𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑍁
செல்வானாக		
𑌗𑌚𑍍𑌛	𑌗𑌚𑍍𑌛𑌤𑌮𑍍	𑌗𑌚𑍍𑌛𑌤
செல்வாயாக		
𑌗𑌚𑍍𑌛𑌾𑌨𑌿	𑌗𑌚𑍍𑌛𑌾𑌵	𑌗𑌚𑍍𑌛𑌾𑌮
செல்வேனாக		

𑌭𑍂. 𑌭𑌵 ஆகு

𑌭𑌵𑌤𑍁 / 𑌭𑌵𑌤𑌾𑌤𑍍	𑌭𑌵𑌤𑌾𑌮𑍍	𑌭𑌵𑌨𑍍𑌤𑍁
ஆகுவானாக		
𑌭𑌵 / 𑌭𑌵𑌤𑌾𑌤𑍍	𑌭𑌵𑌤𑌮𑍍	𑌭𑌵𑌤
ஆகுவாயாக		
𑌭𑌵𑌾𑌨𑌿	𑌭𑌵𑌾𑌵	𑌭𑌵𑌾𑌮
ஆகுவேனாக		

𑌵𑌹𑍍 - சும

𑌵𑌹𑌤𑍁	𑌵𑌹𑌤𑌾𑌮𑍍	𑌵𑌹𑌨𑍍𑌤𑍁
சுமப்பானாக		
𑌵𑌹	𑌵𑌹𑌤𑌮𑍍	𑌵𑌹𑌤
சுமப்பாயாக		
𑌵𑌹𑌾𑌨𑌿	𑌵𑌹𑌾𑌵	𑌵𑌹𑌾𑌮
சுமப்பேனாக		

யஜ் பூஜி

ஒருமை	இருமை	பன்மை
யஜது	யஜதாம்	யஜந்து

பூஜிப்பானாக

